BTA
BERGEN TAMILSK AVIS
47
February
2026

தேன்தமிழிதழ்

Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440 (Print ISSN: 2703-8785)

ஓவியம்: ஓவியர் அமரர் கருணா வின்சென்ற்

ஆசிரியம்!

2026ஆம் ஆண்டு பிறந்து ஒரு மாதம் ஓடிவிட்டது. பூமிப்பந்து அதிவேகமாக சுற்றிக்கொண்டிருக்கிறது. அதற்கேற்ப மக்களும் நடை போடுகிறார்கள். உலக நாடுகள் பலவற்றில் இயற்கை அனர்த்தங்கள் ஒரு புறம் மக்களை தாக்கி வருகிறது. அது போதாது என்று நாட்டுக்கு நாடு யுத்தங்களும் நடைபெற்று வருகின்றன. இதனால் பாதிக்கப்படும் மக்களின் அவலங்கள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. அவர்களுக்கு எவ்வாறு உதவிக்கரம் கொடுப்பது என தெரியாது பெரிய தொண்டு நிறுவனங்களே திகைத்து நிற்கின்றன.

காஸா, உக்ரைன் போன்ற நாடுகளில் கடும் குளிரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து, அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் வீதிகளில் சிறு குடில்கள் கூட அற்ற நிலையில் தவித்து நிற்கிறார்கள். ஆரம்பத்தில் மக்களுக்காக குரல்கொடுத்த பல நாட்டு தலைவர்களும், சமயத் தலைவர்களும் இன்று மௌனித்து விட்டார்கள். யுத்தங்கள் நடத்தும் அரசியல் தலைவர்களும், அவர்களுக்கு ஆதரவு கொடுக்கும் தலைவர்களும் மனமாற்றம் அடைந்து யுத்தங்களை நிறுத்தி மக்களை சுமூக வாழ்வுக்குள் கொண்டு வர வேண்டுமென தேன் தமிழிதழ் இந்த வேளையில் பிரார்த்திக்கின்றது.

நோர்வே அரசாங்கம் 2026ம் ஆண்டை 'மொத்த பாதுகாப்பு ஆண்டு 2026' என்று வரையறுத்துள்ளது. இதன் நோக்கம் நோர்வேயின் மொத்த பாதுகாப்பிலும் கவனம் செலுத்தி, இந்நாட்டு மக்களைப் பாதுகாத்து வைத்திருப்பதாகும். பாதுகாப்புக் கொள்கை நெருக்கடிகளை நிர்வகிக்கும் நோர்வேயின் திறனை வலுப்படுத்தி நாட்டை போர் அண்டாது பாதுகாத்துக் கொள்ளுவதே இலக்காகும். இதற்காக அரசு, மக்கள், இராணுவம் அனைத்தும் இணைந்து பணியாற்ற திட்டமிட்டுள்ளனர்.

உறவுகளே இது 2026ம் ஆண்டின் முதலாம் இதழ், 47வது தேன் தமிழிதழ். வாசகர்களான தங்களுக்கு அத்தியாவசிய ஆக்கங்களோடு தேன் தமிழிதழ் மலர்ந்து வருகின்றது என நம்புகின்றோம். உங்களது ஆக்கப்பூர்வமான விமர்சனங்களைத் தொடர்ந்து தாருங்கள். உங்களது விமர்சனங்களே தேன் தமிழிதழ் தொடர்ந்தும் சிறப்புற்று மலர வழி சமைக்கும்.

தேன் தமிழிதழ்

Ansvarlig redaktør: **Julius Antoni**

ஆசிரியர்: **யூலியஸ் அன்ரனி**

தொலைபேசி எண்: (47) 924 63 674

BTA BERGEN TAMILSK AVIS

Vipps 729129, eller
bank konto: 3626 31 78585

பறவைக் காய்ச்சல் எச்சரிக்கை...!

பேர்கனில் பறவைக் காய்ச்சல் கண்டறியப்பட்டுள்ளது.



பேர்கனில் பறவைக் காய்ச்சல் H5N1 நோயை நோர்வே உணவுப் பாதுகாப்பு ஆணையம் கண்டறிந்துள்ளது. நோய்வாய்ப்பட்ட, இறந்த பறவைகளைக் கண்டால் மிகவும் அவதானமாக இருங்கள் எனவும் பேர்கன் நகர சபை சில ஆலோசனைகளையும் தமது தளங்களில் வெளிப்படுத்தி உள்ளனர். அந்த ஆலோசனைகளை பின்பற்றும் படியும் நகரசபை மக்களை பணிக்கிறது.

நோய்வாய்ப்பட்ட அல்லது இறந்த பறவைகளைக் கண்டால் என்ன செய்வது என்பது குறித்த ஆலோசனை இங்கே.

5,6 வாரங்களுக்கு முன்பு, நகர்ப்புற சுற்றுச்சூழல் நிறுவனம் நோய்வாய்ப்பட்ட மற்றும் இறந்த svaner (அன்னம்) பறவைகள் பற்றிய பல அறிக்கைகளைப் பெற்றுள்ளது. பறவைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையே தொற்று ஏற்படும் ஆபத்து மிகக் குறைவு, ஆனால் இறந்த பறவைகளைக் கையாள வேண்டியிருந்தால் நீங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நீங்கள் நோய்வாய்ப்பட்ட அல்லது இறந்த பறவையைக் கண்டால் நோர்வே உணவுப் பாதுகாப்பு ஆணையத்திடம் புகாரளிக்கவும்.

தொற்று ஏற்படுத்தக் கூடிய இறந்த பறவைகளை எவ்வாறு கையாள்வது, தொற்று ஏற்படக்கூடிய பறவைகளைக் கண்டால் அவற்றை நகர்த்த வேண்டியிருந்தால், நோர்வே உணவுப் பாதுகாப்பு ஆணையம் பின்வரும் தொற்று கட்டுப்பாட்டு ஆலோசனையைத் தயாரித்துள்ளது:

கையுறைகள் இல்லாமல் நோய்வாய்ப்பட்ட அல்லது இறந்த பறவைகளைத் தொடாதீர்கள். தொற்று இருப்பதாக சந்தேகம் உள்ள இடங்களில் நோய்வாய்ப்பட்ட, இறந்தபறவைகள், பிற விலங்குகளைத் தொடாதீர்கள். இறந்த பறவையை கையாள வேண்டியிருந்தால், ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய கையுறைகள் மற்றும் முகமூடியை அணியுங்கள். பறவைகளைப் புதைக்கலாம், அல்லது வழிகாட்டுதலுக்கு நகராட்சியைத் தொடர்பு கொள்ளவும்: bymiljoetaten@bergen.kommune.no

உங்கள் கைகளை நன்றாகக் கழுவுங்கள். பறவை எச்சங்கள் அல்லது பறவையுடன் தொடர்பு கொண்ட உபகரணங்களுடன் தொடர்பு கொண்ட பிறகு உங்கள் கைகளை நன்றாகக் கழுவுங்கள்.

பறவையுடன் தொடர்பு கொண்ட பிறகு உங்களுக்கு காய்ச்சல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் மருத்துவரைத் தொடர்பு கொள்ளுங்கள்.

செல்லப்பிராணிகளை விலக்கி வைக்கவும். நோய்வாய்ப்பட்ட மற்றும் இறந்த பறவைகளிடமிருந்து உங்கள் நாய்கள் மற்றும் பூனைகளை விலக்கி வைக்கவும்.

குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் 2026

25 வது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் இவ்வாண்டு மாசி 6 முதல் மாசி 22 வரை இத்தாலியின் பிரதான நகர்களான Milano og Cortina d'Ampezzo ஆகிய இடங்களில் வெகு சிறப்பாக நடைபெறுகிறது. இத்தாலி குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை நடாத்துவது இது மூன்றாவது முறையாகும்.

ரஷ்யா மற்றும் பெலாரஷ்யா ஆகிய நாடுகளை சர்வதேச ஒலிம்பிக் குழுவினர் (IOC) இந்த விளையாட்டுப்போட்டிகளுக்கு அழைக்கவில்லை. 2022 ஆம் ஆண்டு ரஷ்யா உக்ரைன் மீது படையெடுத்ததைத் தொடர்ந்து, ரஷ்யா தேசிய ஒலிம்பிக் குழுவால் (IOC) இடைநீக்கம் செய்யப்பட்டது,

மேலும் படையெடுப்பில் உடந்தையாக இருந்ததாலும், ரஷ்யாவிற்கு தொடர்ந்து ஆதரவளித்ததாலும் பெலாரஷ்யாவையும் தேசிய ஒலிம்பிக் குழு இடைநீக்கம் செய்தது.

தகுதிவாய்ந்த தனிப்பட்ட ரஷ்ய மற்றும் பெலாரஷ்ய விளையாட்டு வீரர்கள் 2026 குளிர்கால ஒலிம்பிக்கில் தனிநபர்நடுநிலை தடகள வீரர்களாக (AIN) போட்டியிட அழைக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உதவும் கரங்களின் ஏற்பாட்டில்...

பொங்கல் விழா 2026

ஆனந்தராகா கலைக்கூட மாணவர்கள் படங்கள்: சிந்து ஆனந்தராஜ சர்மா

உதவும் கரங்களின் ஏற்பாட்டில் நோர்வே Åsane kultur மண்டபத்தில் தமிழர் திருநாளாம் பொங்கல் விழா கடந்த 31.01.2026 சனிக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வு வழமையான மங்கல விளக்கேற்றல், அகவணக்கம், போன்றன தமிழ் தாய் வாழ்த்துடன் நடைபெற்றது.

வரவேற்புரை வழங்கிய திரு யூலியஸ் அவர்கள் குருக்கள், பெரியவர்கள், கலைக்கூட ஆசிரியர்கள், மக்கள் அனைவரையும் வரவேற்ற பின், கடந்த ஆண்டில் நடைபெற்ற பொங்கல்விழா தொடர்பில் உதவும்கரங்களுக்கு சில விமர்சனங்கள் வந்ததாகவும் அவற்றிலே கலை நிகழ்வுகளின் நேரம் அதிகரித்துவிட்டது. சில நிகழ்வுகளின் நேரத்தினை மட்டுப்படுத்தும் படியாகவும் தெரிவிக்கப்பட்டமையினை குறிப்பிட்டு, இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது.

இவ்வருட நிகழ்வில் நாம் இதனை கருத்தில் கொண்டு நிகழ்வுகளை அரங்கேற்றுகிறோம். நேரத்தினை மிகவும் மட்டுப்படுத்தி கலை நிகழ்ச்சிகளை மக்களுக்கு ஏற்ற வகையில் தயாரித்து தருகிறோம் என குறிப்பிட்டார்.

அடுத்து, சில பெற்றோர் தமது பிள்ளைகளின் நிகழ்வுகள் முடிவடைந்ததும், பின்னால் வரும் நிகழ்வுகளை பார்வையிடாது வீட்டுக்கு சென்று விடுகிறார்கள் என்ற விமர்சனமும் வந்திருப்பதாக குறிப்பிட்டார். இந்த கருத்தும் மக்களிடமே இருந்தே கவலை-யோடு வந்திருக்கிறது. இதுவும் ஒரு முக்கியமான விடயமாகும். ஏராளமான தமிழர்கள் தமது பிள்ளைகள் ஆடினாலும், பாடினாலும் மட்டும் தான் கலை நிகழ்ச்சிகளுக்கு வருகிறார்கள். தாம் சார்ந்த நிகழ்வுகள் இல்லையென்றால் அவர்கள் பார்வையாளர்களாகக் கூட பங்களிப்பு கொடுக்க மாட்டார்கள். வந்தாலும் தமது நிகழ்வு முடிவடைந்ததும் கைப்பைகளை தூக்கிக் கொண்டு போய் விடுகிறார்கள்.

இதற்கான பதிலினை மக்கள்தான் கூறியாக வேண்டும். அவையில் கூடியிருக்கும் மக்களே நீங்கள்தான் இதனை கருத்தில் கொண்டு முடிந்தவரை முழு நிகழ்வுகளையும் பார்வையிட்டு செல்லும்படி கேட்டுக் கொண்டார்.

வரவேற்புரையினை தொடர்ந்து கலைக்கூடங்களின் நடனங்கள், சங்கீதம் போன்ற நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன. பேர்கன் வாழ் தமிழ் சிறார்கள் தாம் கற்றுவரும் கலையினை மிகவும் திறமையாக அரங்கில் வெளிப்படுத்தினர். அனைத்து சிறுவர்களும் இளையோருக்கு பாராட்டப்பட வேண்டியவர்கள். தேன் தமிழிதழின் உளம் நிறைந்த பாராட்டுக்கள்.

தொடர்ந்து உதவும் கரங்களின் பொறுப்பாளர் நந்தினி குணலிங்கம் அவர்கள் கடந்த ஆண்டில் அமைப்பின் செயற்பாடுகள், தாய் நாட்டில் எவ்வாறான உதவிகள் செய்யப்பட்டன என்பவை தொடர்பான அறிக்கையினை சமர்ப்பித்தார்.
இடைவேளையின் போது நாவுக்கு சுவையான பொங்கல், சுண்டல், தேநீர் பரிமாறப்பட்டன.

இடைவேளையின் பின்னர் நோர்வே **திருமறைக் கலாமன்றத்தின்** தயாரிப்பில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. "தற்காலத்திற்கு சிறந்தது பாரம்பரிய உணவா? துரித உணவா (Fast food)" எனும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. விவாதித்த அனைவரும் தமது தலைப்புகளுக்கு ஏற்ப சிறப்பாக தத்தமது கருத்துக்களை பதிவு செய்தனர்.

புலம் பெயர் வாழ் மக்கள் தமது பாரம்பரிய உணவினைத்தான் இந்த நாடுகளிலும் உண்டு வருகிறார்களா? எவ்வகையான உணவில் ஊட்டச் சத்து அதிகம் இருக்கிறது? இந்த இயந்திரமய வாழ்விலே எமது பாரம்பரிய உணவு தயாரித்தல் என்பது சாத்தியமா? இவ்வாறு பல கேள்விகள் எழுப்பப்பட்டு நகைச்சுவையோடு உரையாடினர். நடுவர் திரு. வாசன் அவர்களும் சிறப்பாக பட்டிமன்றத்தினை வழிநடத்தினார்.

அவர் தனது தீர்ப்பில் துரித உணவு (Fast food) சார்பில் விவாதித்தோர் சிறப்பான கருத்துக்களை முன் வைத்தனர் என்றும், இருப்பினும் எமது பாரம்பரிய உணவே சிறந்தது எனவும் தீர்ப்பு வழங்கினார். அரங்கில் நிறைந்திருந்த மக்களை பட்டிமன்றம் வெகுவாகக் கவர்ந்தது என்றே கூறலாம். குறிப்பாக தாய்மார் அதிகம் பட்டி மன்றத்தில் பேசப்பட்ட கருத்துக்களை தமது வாழ்வில், தமது வீட்டில் உணவு தயாரித்தலில் சந்திக்கும் சவால்களோடு ஒப்பிட்டு பட்டிமன்றத்தை இரசித்ததனை காண முடிந்தது.

நிகழ்வுகளை நிஷாந்தன் குணலிங்கம் அவர்கள் மக்கள் சோர்ந்து போகா வண்ணமும், அரங்கில் கூடியிருந்த பெரியோரும், இளையோருக்கு எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் சிறப்பாக நிகழ்வினை தொகுத்து வழங்கினார்.

உதவும் கரங்களின் பொங்கல் விழா கடந்த 37 ஆண்டுகளாக பேர்கனில் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. காலத்தின் கோலத்தால் நாம் எந்த நாட்டினில் வாழ்ந்து வந்தாலும் நமது முக்கிய பண்டிகைகளை கொண்டாடி, கலை வடிவங்களை அழிய விடாது அரங்கேற்றி வருகின்றமை பாராட்டப்பட வேண்டியதே.

றூபா, மதன்பாபு, விஸ்ணுகுமார் வாசன் சிங்காரவேல்(நடுவர்) சியாமளா, யாழினி, ஜெனிட்டா

பூஜா சுரேஷ்குமார்

அபினயா சுகந்தன்

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் எம்தேசக் கலைஞர்களென அவதானிப்போமானால் நிறையவே இசைக் கலைஞர்களை உள்வாங்கிக் கொண்டது நோர்வே என்பது தெளிவாகும். 1988இல் நோர்வேயின் தேசியத் தொலைக்காட்சியான NRK நிகழ்ச்சியில் சித்திரைத் திருநாளை முன்னிட்டு இரண்டுக்கு மேற்பட்ட தடவைகள் ஒளிபரப்பப்பட்ட "ஓடிவரும் கடலே ஒற்றைப்பனை மரமே..." என்ற பாடலை நிச்சயம் நாம் பதிவு செய்தாக வேண்டும். குட்டிமாஸ்ரர் என நோர்வேத் தமிழர்களால் அழைக்கப்படும் சுந்தரமூர்த்தி கணேசன் அவர்களது இசையமைப்பில், கவிஞர் இளவாலை விஜேந்திரனின் அந்தப் பாடல் உருவாக்கம் பெற்று ஒளிபரப்பப் பட்டது.

இதன் நீட்சியாக "The Roots" என்ற இசைக்குழு உருவாக்கப்பட்டு இன்றுவரை பல இசைக் கலைஞர்களை உள்வாங்கி இயங்கி வருகின்றது. நூற்றுக்கும் மேற்பட்ட இசைத் தொகுப்புக்கள் நோர்வேயிலிருந்து 1988 தொடக்கம் இன்றுவரை வெளி வந்திருக்கின்றன. இந்த விபரங்கள் பற்றிய விரிவான நூற்தொகுப்பை தமிழிலும், நோர்வேஜிய மொழியிலும் கவிஞர் உமைபாலன் அவர்கள் வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

மேற்படி இசைப்பாசறைக்குள் அறிமுகமான நூற்றுக் கணக்கான இசைக் கலைஞர்களுள் மிகவும் முக்கியமான இசையமைப்பாளர்களில் ஒருவர்தான் இசையமைப்பாளர் விக்னகுமார் மகேசன் அவர்கள். இவரது இருபதுக்கும் அதிகமான பாடல்கள் கடந்த சில ஆண்டுகளில் ஒளிப்பதிவுகளாக வெளி வந்திருக்கின்றன. இன்னும் பல பாடல்கள் தயாரிப்பிலும், படப்பிடிப்பிலும் உள்ளன.

இந்த ஆண்டு வெளியான "சின்னத் தாயே..." என்ற பாடலை அறிமுகம் செய்யும் குறிப்பு இது என்பதால் அதுபற்றியதான சிறு பதிவு மட்டும்தான் இது.

கவிஞர் சோதியாவின் "பிள்ளைப்பூவே செல்லச்சேயே, விழித்துளிகள் ஏனம்மா?" என்ற படலை இசையமைத்து ஒளியோவியக் கவிதையாகத் தயாரித்து வெளியிட்டுள்ளார் இசையமைப்பாளர் விக்னகுமார் மகேசன் அவர்கள்.

தாயுமானவன்:

எல்லாத் தந்தையருக்குள்ளும் மிகப்பரிவானதும் பக்குவமானதுமான தாய் இருப்பார். அதிலும் தாயை இழந்த குழந்தையின் தந்தையானவனின் பொறுப்பும், பராமரிப்பும் பன்மடங்கு அபரிதமானது. அத்தகைய ஒரு கதையை கருப்பொருளாகக் கொண்டதே கவிஞர் சோதியாவின் "சின்னத்தாயே" கவிதையாகும். இதனை இசையமைத்து பாடலாய் ஒலிப்பதிவு செய்ததோடு மட்டும் நின்றுவிடாமல், ஒளியோவியமாகத் தயாரித்து வெளியிட்டமை பாராட்டுக்குரியதாகும்.

அன்றாடம் கடல் அலைகளோடும், காற்றின் சீற்றத்தோடும் போராடிக் கரைமீளும் ஒரு மீனவத் தந்தை. தாயை இழந்த தனது சிறு மகளாரின் மீதான அவனின் பாசப்

பகிர்வு. இவற்றைப் பதிவு செய்ய சோதியாவின் கவிதை வரிகள் மட்டுமல்ல, இசையும், காட்சிப்படுத்தலும், நடிகர்களின் நிகழ்த்துதலும் என ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டும், ஒன்றையொன்று ஆரத் தழுவிக்கொண்டும் இயங்குகின்றன.

கடற்கரைக்காட்சி என்பது எப்போதும் அழகுதான். நாம் பள்ளிக் காலங்களில் ஓவியம் வரைதல் என்றால் அதிகம் தேர்வுசெய்வது கடற்கரைக் காட்சிகள்தான் இல்லையா?. இத்தோடு உழைக்கும் மாந்தரின் உப்பு வியர்வை நெடியும், உறவுப் பரிவு பாசமும் என ஒருங்கே இணைந்து காட்சியாக்கப் படும்போது அதற்கு நிகர் வேறேதும் இருக்க முடியாது. இந்தக் காட்சிப்படுத்தலை மிகப் பொறுப்போடு இயக்குநர் பரதனும், ஒளிப்பதிவாளர் ரிஷிந்தனும் இணைந்து தமது தோள்களில் சுமந்து தந்திருக்கிறார்கள்.
“தேரிலேறி கரைசேரும் கடலலைகள்” என எனக்குள் இந்தப் பாட்டுப் படத்துக்கு தலைப்பிட்டுக் கொண்டேன். படத்தொகுப்பும் மிகவும் அக்கறையோடு மேற்கொள்ளப் பட்டிருப்பது மேலும் சிறப்பு என்பேன்.

ஒருசில நிமிடங்களுக்குள் கண்களைக் கசியவைக்கும் காட்சிகளென பலதை இதில் சொல்ல முடியும். என்னையும் கண்கள் கலங்கிய காட்சியொன்று “தந்தை பிடித்துவந்த மீன்களை வியாபாரிகளுக்குக் விற்றுவிட்டு அந்தப் பணத்தை மகள் எண்ணியபடி தெருவில் நடந்து வருகிறார்கள்” ஒருசில நொடிகள்தான் இந்தக் காட்சி. ஆனால் சட்டென நெஞ்சில் தைத்ததோடு, எனது தந்தையையும் ஒருகணம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்தியது.

இதேபோன்று “தந்தை உலையில் சோறு சமைத்துக் கொண்டிருக்க, மகள் குடிசையில் வாசலிலிருந்து படித்துக் கொண்டிருக்கிறாள், பின்பு தானும் அடுப்படிக்குப் போய் ஒத்தாசை செய்கிறாள்” இப்படிப் பல காட்சிகள்.

நடிகர்களான ஊரெழு பகி, தீபிகா, ரோஷன், தினால் என்போரை இதில் நான் நடிகர்களாகவே காணவில்லை. நெய்தற்கரையோர மாந்தர்களாகவே கரையில் நடமாடினார்கள். இவர்களை எமது ஈழத்துத் திரையுலகம் கவனத்திற் கொள்ள வேண்டும் என கட்டாயமாகச் சொல்கிறேன். தாருவின் குரலில் இன்னும் நிறையப் பாடல்கள் வெளிவர வேண்டும். கவனத்துக்குரிய பாடகன். எமது இசையமைப்பாளர்கள் தாருவை நிச்சயமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்றே நம்புகின்றேன்.

VM Creative தயாரிப்புநிறுவனம் இப்படி நிறையவே படைப்புக்களை வெளியிட்டு வருகின்றது. எந்தவித வரும்படியும் இல்லாமல், சொந்தச் செலவில் சூனியம் செய்வதுபோல் செய்து வருகின்றது என்பதையும் பலர் அறிவார்கள். ஏனிந்த வேலை எனக் கேட்டால் சொல்வார்கள், இத்தகைய படைப்புக்களை வெளிக் கொணர்வதை எமது சமூகக் கடமை என்று. இந்தத் தயாரிப்பு நிறுவனம் வேறு யாருமல்ல, இசையமைப்பாளர் விக்கி மகேசன் தான்.

இரண்டு ஆண்டுகளுக்குமுன் வெளியாகி, இன்றுவரை பேசப்பட்டுக் கொண்டிருக்கும் எனது “கடலம்மா” பாடலை இசையமைத்துத் தந்தது மட்டுமல்லாது, அதன் படத் தயாரிப்புச் செலவில் ஒரு பகுதியை பொறுப்பேற்றுக் கொண்டதையும் இந்த இடத்தில் நான் பதிவு செய்துதான் ஆக வேண்டும்.

-தமயந்தி-

பெண்ணாகப் பட்டவள்...

ஷர்மிளா ஷெய்யித்

பருவ வயதுப் பெண் உடல் என்ன வகை மாற்றத்திற்கு உள்ளாகும் என்று எல்லாரும் அறிவார்கள். முப்பத்தைந்து வயதுக்குப் பிறகு பெண் உடலுள் என்ன நடைபெறும் என்று எத்தனை பேர் அறிவார்கள்?

இந்தப் பதிவினை எங்கோ படித்த, கேட்டதிலிருந்து அல்ல, எனது அனுபவத்திலிருந்தும் மருத்துவப் பரிசோதனைகளின் போது மருத்துவர்கள் எனக்குச் சொல்லியவற்றிலிருந்தும் புரிந்து கொண்டதை வைத்து எழுதுகிறேன்.

35 வயதுக்குப் பிறகு பெண்களின் கருமுட்டைச் சுரப்பிகள் (ovaries) குறைந்த அளவில் எஸ்ட்ரோஜன், ப்ரோஜெஸ்ட்ரோன் (Estrogen and Progesterone) ஹார்மோன்களை உற்பத்தி செய்யத் தொடங்கும் இது இயற்கையானது. எல்லாப் பெண்களுக்குமானது. இந்த ஹார்மோன்களில் ஒன்று குறைந்தாலே எல்லாம் சீர்குலைய ஆரம்பித்து, உடல் கட்டுபாட்டினை இழந்த உணர்வைத் தரும்.

ஹார்மோன்கள் தான் நம் உடலில் எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகின்றன. இது நாமறிந்த ஒரு பொதுவான விசயம். மெட்டபாலிசம், நம் மனநிலை, மூளையின் செயல்பாடு, உறக்கம் இப்படி எல்லாமே ஹார்மோன் கட்டுப்பாட்டில் நிகழ்பவை. அதனால் எஸ்ட்ரோஜன் மற்றும் ப்ரோஜெஸ்ட்ரோன் குறையும்போது, உடல் மனம் இரண்டுமே சமநிலையை இழக்கத் தொடங்கும்.

இதைக் குறித்து எனக்கு துக்ககரமான அனுபவமும் இருக்கிறது. நம்பிக்கை தரும் விஷயமும் இருக்கிறது. கேன்சர் சிகிச்சைக்குப் பிறகு எனது உடல் முற்றாக அதன் சம நிலையை இழந்தது. உடல் சூடு திடீரெனக் கூடி வியர்க்கும். குறிப்பாக இரவில். உடல் எடை எவ்வளவு முயன்றாலும் எகிறிக்கொண்டே போவதுபோல இருக்கும் வயிறு வீங்கினாற்போல. எந்நேரமும் சோர்வு, இடுப்பு வலி, மூட்டு வலி, ஒரு வகை மந்த நிலை.... இப்படி ஏகப்பட்டவை.

இவை எல்லாம் கேன்சர் சிகிச்சையின் விளைவுகள் என நீங்கள் நம்பினாலும் இவை உங்களது ஹார்மோனுடன் சம்பந்தப்பட்டது என மருத்துவர்கள் உறுதிபடச் சொன்னார்கள். உடலில் ஹார்மோன் சமநிலையை மீட்டெடுக்க Hormone Replacement Therapy (HRT) உதவக் கூடும் எனப் பரிந்துரைத்தார்கள். இங்குதான் என் தேடல் தொடங்கியது. அதற்கு முன்பாக, Hormone Replacement Therapy (HRT) என்பது என்ன என்று நான் அறிந்ததைச் சொல்லிவிடுகிறேன். உடலில் குறைந்து வரும் ஹார்மோன்களை (முக்கியமாக எஸ்ட்ரோஜன் மற்றும் ப்ரோஜெஸ்ட்ரோன்) வெளியில் இருந்து வழங்கி, உடலின் சமநிலையை மீட்டெடுக்க உதவும் ஒரு மருத்துவ சிகிச்சையே இது.

பெண்களில் குறிப்பாக:

- மெனோபாஸ் / பெரிமெனோபாஸ் காலத்தில்
- 35 - 40 வயதிற்குப் பிறகு ஹார்மோன் அளவு குறையத் தொடங்கும்போது Hormone Replacement Therapy (HRT) எடுத்துக் கொள்வதால்,
- தூக்கமின்மை
- உடல் வெப்பம் திடீரென அதிகரிப்பது (hot flashes)
- எடை அதிகரிப்பு
- மூளை மந்தம் (brain fog)
- மனநிலை மாற்றங்கள், மனச்சோர்வு
- கவலை, பதட்டம்
- எலும்பு பலவீனம்

இன்னோரன்னவற்றை கட்டுப்படுத்தலாம் எனச் சொல்லப் படுகின்றது. HRT மாத்திரை (pill), ஒட்டும் பிளாஸ்டர் (patch), ஜெல் அல்லது க்ரீம், இன்ஜெக்ஷன் போன்ற பல வடிவங்களில் சந்தையில் கிடைக்கின்றது.

உண்மை என்னவென்றால், HRT எல்லோருக்கும் ஒரேமாதிரிப் பொருந்தாது. பெண்களின் வயது, நோய்வரலாறு, குடும்ப மருத்துவப்பின்னணி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மருத்துவர் பரிந்துரையுடன் மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும், உடல் இழந்துவிட்ட ஹார்மோன் சம நிலையை மீட்டெடுக்க உதவும் ஒரு ஆதரவு சிகிச்சை மட்டுமே HRT. உண்மையில் இந்தக் காலத்தில் பெண்களுக்குத் தேவை உடன் இருப்பவர்களின் அன்பு, அரவணைப்பு, ஒத்துணர்வு (empathy) இவைகளே.

மெனோபாஸ் / பெரிமெனோபாஸ் காலத்து பெண்களின் பாடுகளை இன்னும் ஒரு நூற்றாண்டு கடந்தாற்கூட குடும்ப அமைப்புக்குள் ஆண்கள் புரிந்து கொள்வார்களா என்பது சந்தேகமே. இப்போதுதான் பெண்களின் மாதவிடாய் பற்றிய புரிதலை ஓரளவு எட்டியிருக்கிறது ஆண் சமுதாயம். மாதவிடாய்கால வலி, மனநிலை மாற்றத்தையே இன்னும்



முழுமையாக உள்வாங்காதவர்களுக்கு மெனோபாஸ்/ பெரிமெனோபாஸ் வெறும் "ஸ்" ஓசைகள்தான். மெனோபாஸ் / பெரிமெனோபாஸ் காலந் தரும் வலிகள், சோர்வு, மன நிலை மாற்றங்களை விடவும் இத்தகைய புரிதல் இல்லாத சூழலை வெல்வதே பெண்களுக்கு முன்னுள்ள மகா துயரமும், சவாலும்.

கொஞ்சம் உடலுக்கு முடியவில்லை என்றால் ஒரு நாள் என்ன, ஒரு வாரமோ, பத்து நாளோகூட அலுவலக விடுப்பு எடுத்துக்கொள்ள முடிந்தாலும் வீட்டு வேலைகளிலிருந்தும் பொறுப்புகளிலிருந்தும் விடுப்பு என்பது பெண்களுக்குச் சாத்தியமே இல்லை.

உடலுக்கு முடியவில்லை என்றால் அவர்களாக ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு விளக்கத்தை நாம் தரவேண்டியிருக்கும். உடனே மருத்துவரிடம் அழைத்துப் போயோ, ஏதாவது மருந்து மாத்திரையைத் திணித்தோ மீண்டும் நாம் இயந்திரம்போல சுழல்வதைப் பார்ப்பதில்தான் குடும்பம் திருப்தியடையும். உடல் களைப்பாக இருப்பதையோ, சோர்வாக இருப்பதையோ அல்லது நம் உடல் குறித்து நாம் சொல்ல விரும்பாத எதனையும் புரிந்துகொண்டு அதற்கான இடைவெளியைத் தரக்கூடிய சமூகம் இன்னும் உருவாகவில்லை.

HRT சிகிச்சை எல்லாருக்கும் சாத்தியப்படப் போவதுமில்லை. அப்படியே எடுத்துக் கொண்டாலும் நம் உடலுக்கு ஓய்வைக் கொடுக்க வேண்டியதும், நேரகாலத்திற்கு உறங்க வேண்டியதும் நாமாகச் செய்துகொள்ள வேண்டியவை.

ஆக, பெண்கள் தாங்களே தங்களைக் காப்பாற்றிக் கொள்வதைத் தவிர வேறு தெரிவுகள் இல்லை. இந்தக் காலத்தில் எந்நேரமும் வீட்டைப் பெருக்கிச் சுத்தமாக்கிக் கொண்டு, வகைதொகையாக ஆக்கிப் படைத்துக் கொண்டு, எல்லாரும் தின்றார்களா, படுத்தார்களா போன்ற ஊதியமேயில்லாதஉத்தியோகங்களிலிருந்துஒதுங்கிக்கொள்ள பெண்கள் தயாராகவேண்டும். உண்மையில் நாம் சமைத்துப் போடவில்லை என்று யாருமே செத்துவிடமாட்டார்கள். நாம் கவனிக்கவில்லை என்று யாருமே கரைந்துபோய் விடவும் மாட்டார்கள். சொல்லப்போனால், நம்மை எந்நேரத்திலும் உதறித் தள்ளிவிட்டு மூட்டையைக் கட்டிக்கொண்டு கிளம்பிச் செல்லக் கூடியவர்களுக்குத்தான் நம் வலிகளைப் பொறுத்துக் கொண்டும், வலிகளைக் காட்டிக்கொள்ளாமலும் இதையெல்லாம் செய்துகொண்டிருக்கிறோம்.

நம் உடலும் மனமும் சீரான சமநிலையில் இருப்பதற்கு, காற்று ஏறி வெடிக்கத் தயாராக இருக்கும் பலூனைப் போல நம்மை வைத்துக் கொண்டு வாழ முடியாது. ஒரு கட்டத்தில் காற்றடைத்த பலூன் வெடித்துதான் ஆகும். அது உடலில் ஒரு வெடிப்பாகலாம் மனதில் கீறலாகலாம் உறவுகளைக் குலைக்கலாம். அதன் பின்னரே நாம் விழித்துக் கொள்வோம். ஆனால் அது தாமதமான விழிப்பாக இருக்கும்.

பெண்கள் எப்போதும் "சமநிலையாக" இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பே வன்முறை என்றே கருதுகிறேன். உடல்நலக்குறைவு வந்தால் தாங்கிச் சமாளிக்க வேண்டும். மனம் தளர்ந்தால் மறைக்க வேண்டும். சோர்வை வெளிப்படுத்துவது குற்றவுணர்ச்சி. ஓய்வு கேட்டால் சுயநலம். இப்படியாகத்தான் நாம் வளர்க்கப்பட்டிருக்கிறோம்.

மெனோபாஸ் / பெரிமெனோபாஸ் என்பது ஒரு நோய் அல்ல. அது இயல்பானதொரு மாற்றம். ஆனால் அந்த மாற்றத்தைச் சுற்றியிருக்கும் மௌனம் தான் பெண்களைப் பாதிக்கிறது. அதனால்தான் பல பெண்கள் தங்களைத் தாங்களே சந்தேகிக்க ஆரம்பிக்கிறார்கள். "எனக்கு மட்டும் தான் இப்படியா?", "நான் பலவீனமானவளா?", "என்னால இனி முடியாதா?" இப்படி எல்லாம்.
இது பலவீனம் அல்ல. இது உடலின் மொழி.

Hormone Replacement Therapy (HRT) ஒருவருக்கு உதவலாம் உதவாமலும் இருக்கலாம். அது தீர்வின் ஒரு பகுதி மட்டுமே. ஆனால் அதற்கப்பால் பெண்களுக்கு மிகவும் அவசியமானது அவர்களின் உடலின் மொழியைப் புரிந்தேற்கும் சூழல்.

நான் மேலே சொன்னது போல பெண்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள் என்பது உண்மைதான்.

ஆனால் அந்தக் காப்பாற்றலை "தனியாக" செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதை சமூகம் கற்றுக்கொள்ள வேண்டும். அதுவே உண்மையான சமநிலை.

இல்லையென்றால், நாம் இன்னும் பல பெண்களை "சரி தான்" என்ற முகமூடியுடன் நடமாடவிட்டு, உள்ளுக்குள் மெதுவாக உடைந்து போகச் செய்வோம்.

கலாபூஷணம் எஸ்.ஏ.உதயன்

ஆரோக்கியநாதர் யோன் கெனடி துரம்
பேசாலை, மன்னார்

தெம்மாடுகள், கடலிேத்தான், வாசாப்பு போன்ற எட்டு நாவல்களைப் படைத்துத் தந்த எழுத்தாளர், பல்கலை ஆளுமை பேசாலை உதயனுக்கு 12.01.2026 அன்று 2025ஆம் ஆண்டிற்கான கலாபூசணம் அரச உயர் விருது கொழும்பு அலரிமாளிகை சிறப்பரங்கில் வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டார்.

நமது தேசத்தில் இப்போதெல்லாம் பட்டங்கள், விருதுகள், பொன்னாடைகள், பொற்கிழிகள், சந்தணமாலைகள் (டம்மி சந்தணமாலைகள்) என்பதெல்லாம் இந்தியாவைப் போலவே மிகமிக மலினமாகி விட்டபோதும் அவ்வப்போது இப்படி தகுதிகளுள்ள ஆளுமைக் கலைஞர்களுக்கு வழங்கப்படும்போது மனதுக்கு சற்று தேறுதலாக, ஆறுதலாகத்தான் இருக்கின்றது. தமது மண்ணின் மகனுக்கு இத்தகையதோர் மதிப்பளிப்புக் கிடைத்தமைக்காக அவருக்கு மன்னார் நெய்தல்தேசத்து மக்கள் விழாவெடுத்துக் கொண்டாடிய நிகழ்வுகளையும் அவதானிக்க முடிந்தது.

ஒரு கலைஞனுக்குக் கிடைக்கும் பெருமைகளையும், பாராட்டுக்களையும் அவனைச் சார்ந்த உழைக்கும் மக்கள் ஊர்கூடிக் கொண்டாடுவதில் இருந்துதான் நாம் புரிந்துகொள்ள வேண்டும் அந்த விருதுக்கும், மதிப்புக்கும், கௌரவத்துக்குமான அர்த்தமென்பது அவை உண்மையாகவே தகுதி உடையவர்களுக்கு வழங்கப் படுகிறதா என்பதைப் பொறுத்தே அமைகிறது என்பது.

அந்த வகையில் உதயனுக்கு வழங்கப்பட்ட இந்த விருதும், மரியாதையுமானது காலம் பிந்தியதாக இருப்பினும் மகிழ்வோடு வரவேற்கத் தக்கதும், மதிக்கத் தக்கததுமானதுதான்.

கலாபூஷணம் எஸ்.ஏ.உதயன் அவர்களின் கலை இலக்கியப்பணி மிகவும் நீண்ட நெடியதும், சமூகநலன் கொண்ட கனதியானதுமாகும். நாவல்கள், சிறுகதைகள் எனத் தனியே புனைவு இலக்கியங்களோடு மட்டுமல்லாது, சமூக நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், தெரு நாடகங்கள், வானொலி நாடகங்கள், சிறுவர் நாடகங்கள், இசை நாடகங்கள் என 64 நாடகங்களை எழுதி மேடையேற்றியுள்ளார்.

"கஸ்ரகரணம்" (உலகதரிசனம் நிறுவனம் உளவளப்பிரிவுக்காக)
"காலிப்போத்தல்" என இரண்டு குறும்படங்களையும் இவர் தயாரித்து இயக்கியுள்ளார்.

சார்க் நாடுகளின் நாவல் இலக்கிய, மாநாட்டுக்காக 2013ஆம் ஆண்டு பூட்டான் தேசத்திற்கு இலங்கை அரசு இவரை அனுப்பி வைத்திருந்தது. அங்கு இலங்கைத் தமிழ் நாவல்கள் பற்றிய உரையை வழங்கியிருந்தார்.

தற்போது ஓய்வு நிலை நுண்கலை ஆசிரியராக இருந்து கொண்டு தனது கலைச் சேவையை தொடர்ந்து செய்து வருகிறார். மன்னாரிலும், வெளி மாவட்டங்களிலும் காணப்படும் அரசு சாரா நிறுவனங்களுக்காகவும், அரச திணைக் களத்திற்காகவும் பல தெரு நாடகங்களை இவர் நடத்தி பரிசு பெற்றிருக்கிறார். இவர் மன்னாரில் 2013இல் "விழிகள் கலா முற்றம்" எனும் ஒரு கலைக்கூடத்தை ஆரம்பித்து அதன் இயக்குனராக இருந்து கொண்டு பலவிதமான கலைப்பணிகளை ஆற்றி வருகிறார். இந்தக் கலை முற்றமானது ஒரு பயிலகம் போல பல மாணவர்களை உள்ளீர்த்து அவர்களுக்கு நுண்கலைப் பயிற்சிகளை அளித்து வருகிறது. குறிப்பாக நாட்டுக்கூத்து, நடிப்பு, ஒப்பனை, ஓவியம், கவிதை எழுதுதல், பாடல் எழுதி இசையோடு பாடுதல், வாத்திய கருவிகளை இசைக்க கற்றுக் கொடுத்தல், என்பவைகளை தொடர் தேர்ச்சியாக இக்கலை மன்றம் மன்னாரில் செய்து வருகிறது. மன்னாரில் பத்து வருடங்களுக்கும் மேலாக இந்தக் கலைமன்றம் முனைப்போடு இயங்கி வருகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும், மாகாண ரீதியிலும், மாவட்ட ரீதியிலும், பிரதேச ரீதியிலுமான 38 விருதுகள், பட்டங்கள், சான்றிதழ்களைப் பெற்றுப் பெருமை சேர்த்த கலாபூஷணம் எஸ்.ஏ.உதயன் அவர்களை நேர்வே தேன் தமிழிதழும் வாழ்த்திப் பெருமை கொள்வதோடு, தேன் தமிழிதழ் வாசகர்களுக்காக அவர் எழுதிய சிறுகதை ஒன்றையும் அடுத்த பக்கத்தில் தருவதில் மகிழ்கின்றோம்.

புது ட்ரவுசர்

சிறுகதை

-பேசாலை S.A.உதயன்-

அந்த நாளையில ரவூப் எண்டு ஒரு டெய்லர் கடை. பசங்க எல்லாருமே அங்கதான் ட்ரவுசர் தைக்கிறாங்க. நானும் ஒரு ட்ரவுசர் தைக்கிறதுக்கு துணியக் குடுத்திருந்தேன். அளவெடுத்து விட்டவரு. ஒரு அட்டையில நான் குடுத்த துணியில ஒரு துணித்துண்டு வெட்டி ஸ்ரெப்லர் அடிச்சு திகதி குறிச்சுத் தந்ததுதான். நான் குறிச்ச திகதியில போய் நிக்கிறன். என்னட போதாத காலம் அந்த ட்ரவுசர் எப்பிடியோ கைமாறிப்போச்சு. அந்தாள் தேடுறாரு. தைச்சு வைச்சிருக்கிற உருப்படியெல்லாத்தையும் மாறிமாறி கையில எடுத்துப்பாக்கிறாரு. அடுக்கிவைச்ச அலுமாரியில தேடியாச்சு. கடைப் பொடியன்களிட்ட ஏதோவெல்லாம் கேட்டு திட்டுறாரு. எனக்கு ட்ரவுசர் தரணுமே. விடிஞ்சா திருவிழா. கோயிலுக்குப் புதுசா உடுத்திப் போகணுமே. ஐயையோ நம்ம ட்ரவுசரக் காணயில்ல. ரவூப் டெய்லர் என் மூஞ்சியப் பாக்கிறாரு.
“தம்பி.... எப்பிடியோ மிஸ்ஸாயிட்டு..”
“அதுக்கு.... எனக்கு ட்ரவுசர் வேணுமே..”
“ஒண்ணுமில்ல, கொஞ்சம் பொறுங்க தம்பி வேற துணியில தெச்சுத்தாறன்.”
வேறதுணி எப்பிடியிருக்குமோ....! சரி எப்பிடியும் இருந்திட்டுப் போவட்டும் அத எப்ப தருவாரு... எனக்குள்ள மனம் உளைஞ்சு பொத்துக்கின்டுவந்த கேள்விக்கு ரொம்ப ஆறுதலா மூஞ்சிய வைச்சிக்கின்டு சொல்லுறாரு ரவூப் டெய்லர்.

“நீங்க டவுணுக்குள்ள ஏதாச்சும் அலுவல் இருந்தா பாத்திட்டு வாங்க தெச்சு வைக்கிறன்.” நான் நேரத்தப் பாக்கிறன் மணி எட்டரையாயிட்டுது. இனி பஜார்ல கடையெல்லாம் மூடிருவாங்களே... இப்ப பத்து நிமிசத்தில ஊருக்குப் போற பஸ்சு போயிரும். அதுதான் ஊருக்குப்போற கடைசி பஸ். நான் என்ன செய்யிறது.... இந்த பஸ்ஸுப் பிரச்சினை ரவூப் டெய்லருக்கும் இருக்கு எண்டது எனக்குத் தெரியும். அவரும் கரிசலுக்குப் போகணும். அங்கதான் அவரு வீடிருக்கு.
அவரு பஸ்ஸ விட்டிட்டு எனக்காக நின்டு ட்ரவுசர் தைச்சுத் தரப்போறாரா?
ச்ச. ஐயன் சொன்னது ஞாபகம் வந்துது. “டேய் நம்ம அனிபா டெய்லரிட்டக் குடு தைப்பான்”
“அவரு நல்லமாதித் தைக்கமாட்டாரு ஐயா. எல்லாப் பொடியங்களும் டவுணில ரவூப் டெய்லரிட்டத்தான் குடுக்கிறாங்க. அவரு நல்ல சோக்காத் தைப்பாரு.”
“சரி...சரி.. உன்னட இஸ்ரம்.”

எனக்கு மண்டைக்குள்ள நெருப்பு பத்தினமாதி இருக்கு. எனக்கென்டாத் தெரியாது, எனக்கு ட்ரவுசர் வேணும். மனம் தொங்கிப்போய் கண் கசியுது.
நான் திரும்பவும் ரவூப் டெய்லரப் பாக்கிறன். அந்த மனுசன் ஏதோ என்னடபிரச்சினையக் கடந்து போயிட்டமாதிரி கடையில வேற அலுவலப் பாக்கிறாரு. எனக்கு பெரிசா ஏமாத்தப்பட்டதா ஒரு உணர்வு.

ச்சை இவனெல்லாம் ஒரு மனுசனா, ஏமாத்துக்காரன். ரவூப் டெய்லரை மனம் கிடந்து ஏக வசனத்தில திட்டுது. “இவனெல்லாம் நல்லாவே இருக்கமாட்டான். என்னட ட்ரவுசர யாருக்காச்சும் குடுத்து காசு வாங்கிட்டு நடிக்கிறான் களவாணிப்பயல்.”
நான் ஐயாட்ட ஒரு மாசத்துக்கு முன்னுக்கே சொல்லிவைச்சது. “தம்பி இந்த டேம் எக்ஸாமில நல்ல மார்க் வாங்கினாத்தான் புது ட்ரவுசர் தைக்க காசு இல்லாட்டி இல்ல.” ஐயா ஒரு கண்டிப்பான ஆள். ட்ரவுசர் வேணுமென்டதுக்காக குறி வைச்சுப் படிச்சதாலதான் வகுப்பிலயே முதல் மார்க்.

ஐயா மனமுவந்து தந்த காசில துணி எடுத்துக் குடுத்தா இந்த ரவூப் டெய்லர் எல்லாத்தையும் சொதப்பிட்டானே.... கேவிக்கின்டு வந்துது பெருமூச்சு. நாளைக்கு வகுப்பு பொடியன்கள் எல்லாரும் புதுசு உடுத்துவாங்வென்ட நினைப்பு சுட்டது. இனி நின்டா பஸ் போயிரும் மனம் குமுற பஸ் ஸ்ராண்டுக்கு நடக்கிறன்.
இனி இருக்கிறதில ஏதாச்சும் நல்லத எடுத்துப் போடுவம் வேறென்ன செய்யிறது. ஆ...ங் அந்தப் பச்சைக்கலர் டரவுசர்.... அது அக்கா கலியாணத்துக்கு தைச்சது. இப்ப போனவுடனே அதை எடுத்து அய்ன் பண்ணக் குடுக்கணும். ஓ.... சுப்பையாண்ணன் லோண்றிக்கடை திறந்து வைச்சிருப்பாரோ தெரியலையே.....?! திறந்திருக்கும், நாளைக்குத் திருவிழா எண்டபடியால சுப்பையாண்ணன் திறந்து வைச்சிருப்பாரு. மனம் சமாதானப்பட பஸ் ஏறுறேன்.

எனக்கு உற்சாகமில்லாம விடிஞ்சுது. திருவிழாப் பூசைக்கு கோயிலில மணியடிச்சாச்சு. முழிப்பு என்டாலும் ஊருஞ்சனமும் கலகலவெண்டு வெளிக்கிடுறதப் பாக்க மனசில்லாம கண்ணை மூடிக்கின்டு பாயிலயே கிடக்கிறன்.
“டேய் தம்பி, அய்ன் பண்ணின உடுப்பு இருக்குத்தானே எழும்பு வெளிக்கிடு.” அம்மா வைச்ச சத்தம் கேட்டபடிதான் இருக்கு. மனசுப் பாரம் உடம்பை நிமிர்த்த விடாமல் பிடிச்சு இழுக்குது. படலைக்கு வெளியில சைக்கிள் மணிச்சத்தம் கேட்டதோட, ரவூப் டெய்லர் படலையைத் திறந்து கையில ஒரு பையோட வளவுக்குள்ள வாறாரு. “தம்பியெங்க....?”
அது ரவூப் டெய்லரின் சத்தமெண்டு தெரிய நான் படுக்கையில் கிடந்தபடியே திரும்பிப் பாக்கிறன்.
அவருதான். ரவூப் டெய்லர்.
“தம்பி இந்தா ட்ரவுசர்.”
படக்கென்டு எழும்பி அவரிட கையில இருந்த பைய வாங்கிப் பாக்கிறன். புதுசு.... விலைகூடின துணியில தைச்ச ட்ரவுசர்.
“தம்பி என் மகனுக்கு தைக்க கொழும்பில வாங்கின துணி, வீட்டில இருந்துது. அதான் ராத்திரி தைச்சு எடுத்துக்கின்டு வாறன்... ந்தா..”
எனக்கு அந்தக்கணமே திருவிழா துவங்கியிருந்துது.

இரண்டு நோர்வேஜியக் கவிதைகள்



Helge Vatsend

25.11.1928 - 24.01.1994
Bygland, Norway



தமிழில்: பானுபாரதி

Helge Vatsend நோர்வேஜியக் கவிஞர், பாடலாசிரியர், கதாசிரியர். 14 படைப்புக்களைத் தொகுப்பாக வெளியிட்டுள்ளார். இவரது அனேகமான கவிதைகள் எப்போதும் சமூகம் சார்ந்த விமர்சனங்களையே பேசுபொருளாகக் கொண்டிருந்தன. அதனால்தானோ என்னவோ பெரிதும் பேசப்படாமல் நோர்வேஜிய இலக்கியக் களத்தில் கடந்துசெல்லப்பட்டார். இது உலகப்பரப்பின் எல்லா முற்போக்கு இலக்கியத் தளங்களிலும், சமூகங்களிலும் உள்ளதோர் சாபக்கேடுதான்.

ஒரு கவிதை, ஒரு பறவை

இனி
மேலே சொல்வதற்கு ஒன்றுமில்லை
தேனீர் மேசையை சுற்றியிருந்த உரையாடல்கள்
பொருளற்றுக் கரைந்துவிட்டன
தொடர்ந்து எதுவும் முடிவுறாமலே

நாங்கள் முன்னோக்கிச் செல்வதற்கு
எங்களுக்கு வார்த்தைகள் வேண்டும்.
வார்த்தைகள், அர்த்தங்கள், வேகம், வேகம்
சிற்றோடைகளில் விரைந்தோடும்
காட்டுக் குதிரைகளின் பாடல் போன்று

ஒரு சிந்தனையின் ஓட்டத்தில்
உண்மை
இரத்தம் தோய்ந்த உதடுகளின் மீது
பின்னப்பட்டுள்ளது.
எங்கள் மீது சிந்திவிடப்பட்ட வார்த்தைகள்
காலத்தினதாயிருந்தது.

எம்மைத் தொடர்ந்து
முன்னகர்த்தும் வார்த்தைகள்
எமது
இன்றைய நாளினை ஆளுகை செய்கின்றது
ஒரு சிறகசைப்பைப் போல,
ஒரு கவிதை
ஒரு பறவை சாம்பலிலிருந்து எழுவது போல.

ஒரு கோதுமைமணியளவு உண்மை

நீண்ட செங்குத்தான
கடலடி வாரங்களில்
ஒரு கடற்பறவையின்
அமைதியான சிறகசைப்பு
வேகமாய்ப் பாயும் விசையின்
இலக்கும் நோக்கமும்
ஒரு தாளகதியுடன் பூர்த்தியாகின்றது.

அத்தோடு நானும் இங்கேதான்
ஒரு மனிதம்
ஒரு பொழுது
நிறைந்த உண்மைகளுடன்
காலைப்பொழுதை நோக்கி
தடுமாறி குருடாக்கப்பட்ட வழிகளில்

நான் தேடிக்கொண்டிருக்கிறேன்
ஒரு கோதுமை மணியளவு
உண்மையின் தரிசனம்
அதை
காலக்கடிகாரத்தினுள் என்றைக்குமாகப்
பொருத்திவிடுவதற்கு.
ஒரு கடற்பறவையின் கூச்சல் போன்று
கரைதனில் மோதும் அலை போன்று.

அம்மாமேல ஆணை

-லண்டன் சோம்ஸ்-

"என்னக்காட்டிலும் நல்லவடிவா எழுதுவியெல்லோடா...., தேன் தமிழிதழுக்கு எழுதேண்டா மூசேவி" எண்டு சொல்லிக் கேளாத கேள்வியெல்லாங் கேட்டான்.
(மூதேவி என்பதை நாங்கள் அப்பேக்கயிருந்து "மூசேவி" என்று கவுரவமாகத்தான் சொல்லிக்கொள்ளுவம்)

எல்லாத்தையும் ஒரே மூச்சில எழுதிக் கொட்டிப்போடவேணுமெண்ட வேகரம் வந்தது இவன் கட்டையன் விமலோட இண்டைக்கு ரெலிபோணில கதைச்சப் பிறகிட்டு....

அப்பேக்க, என்ர சின்ன வயசில, பக்கத்து வீட்டில் சிறட்டையில நெருப்பு வாங்க செக்கலுக்க இளை யவனான என்னைப் புடிச்சு திரத்தி விட்டுட்டாங்க எல்லாரும் சூழ்ச்சி செய்து.

நான் உலகத்தில உள்ள தேவாரம் எல்லாத்தயும் படிச்சண்டு போனாலும், சனியன்புடிச்ச மின்மினி பூச்சியளுக்குத் தேவாரம் தெரியாதுபோல. முடக்கில திரும்பேக்க சடக்கெண்டு மூஞ்சியில நேர வந்து போச்சுதுகள்... பயந்துகொண்டு விழுந்தடிச்சு ஓடிப்போய் பக்கத்து வீட்ட பூந்தால் அந்த விசர் பெட்டயள் எல்லாம் சிரிக்குதுகள் பகிடி பண்ணி...

வந்த கோவத்துக்கு ஒண்ணுமே பண்ணேலாது எண்டு தெரிஞ்சதால (அவய பெரிய பொம்பிளப் பிள்ளையள்) வந்த அழுகைய விழுங்கி கொண்டு நிண்டன். அவங்களே சிரட்டை எடுத்து நெருப்பு போட்டு கையில சூடுகீடு படாமலிருக்க துணியால சுத்தி வடிவா அக்கறையோட தந்து விட்டாங்கள்... அவயளுக்கும் என்னில ஒரு பாசப்பிணைப்பு எப்பவும் இருக்கெண்டு எனக்கு நல்லாவே தெரியும்.

திரும்ப வரேக்கயும் பேய் பயம்தான் இருந்தாலும் இப்பதான் நெருப்பு இருக்கே... அவங்களையும் மனசுக்க பேசி இருக்க வேண்டாம் என யோசிச்சுக்கொண்டு வந்ததில மின்மினி பூச்சியோ பேயோ வந்து போனதே தெரியேல்ல... வீட்ட வந்து நெருப்பக் குடுக்கவும் மழை கொட்டவும் சரியாக இருந்தது...

எங்கண்ட ஆச்சி தோசைகள் சுட்டு அடுக்கிவச்ச சளகுக்குள்ள இருந்து எல்லாருக்கும் தட்டில எடுத்துப் போடுறபோது எனக்கு மட்டும் அந்தஉடன சுட்டெடுத்த சுடு தோசை தந்தா...
இது நெருப்பு வாங்கிக்கொண்டு வந்தனான் எண்டதுக்காக ஆச்சியாணை லஞ்சமில்ல..
என்மீது ஆச்சிக்கும், ஆச்சி மீது எனக்கும் இருந்த வைரம் பாஞ்ச உறவு...
ஓம், ஆச்சி என்று நான் அழைப்பது என் அம்மாவைத்தான்...

அப்போதும், இப்போதும், எப்போதும் எங்கம்மா எனக்கு ஆச்சிதான்.
"ஆச்சியாணை" என்று நான் மெய்ச்சத்தியம் செய்வதும் எனது "அம்மாமேல் ஆணை"தான்.
"அம்மாவாணை!, ஆச்சியாணை!!"

வெனிசுலா மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு

M.சிவா

யுத்தங்களை வெறுப்பவராகத் தன்னை பிரகடனப்படுத்தி அதற்காக நோபல் பரிசு தனக்கு வழங்கப்பட வேண்டும் என்று அண்மைக் காலமாக பேசிவரும் அமெரிக்க ஜனாதிபதி வெனிசுலா மீது மேலாதிக்கம் செலுத்தியுள்ளது, தாக்குதலை நடாத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்து வெனிசுலாவின் அதிபரையும் அவரின் குடும்பத்தையும் கடத்திச் சென்றிருக்கின்றது அமெரிக்கா.
இதனை நிச்சயம் இந்த வருடம் சமாதானத்திற்கு நோபல் பரிசு பெற்ற வெனிசுலாவின் எதிர்கட்சி தலைவராக இருக்கும் பெண் மரியா கொரினா(María Corina) அமெரிக்காவிடம் முன்வைத்த கோரிக்கை நிறைவேற்றியுள்ளதாக மகிழ்வார்.

அதேவேளை ரஸ்யா அமெரிக்காவின் இந்த வெனிசுலாவின் இறையாண்மையைக் கேள்விக் குறியாக்கும் விடயம் மட்டுமல்ல, சர்வ தேச சட்டத்திற்கு முரணானது என்றாக தனது கண்டத்தை பதிவு செய்திருக்கின்றது.
இதே மாதிரியான கருத்தையே ஈரான் தனது கண்டனத்தில் தெரிவித்துள்ளது. இதற்கும் அப்பால் உலக நாடுகள் பலவும் இச் செயற்பாட்டிற்கு கண்டனம் தெரிவித்தும் வருகின்றன.

போதை வஸ்து கடத்தலின் தலைவராக வெனிசுலா அதிபர் மதுரோ செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டை அண்மைய நாட்களில் அமெரிக்க அதிபர் ட்ரம் முன்வைத்து வருகின்றார். கூடவே இதில் கிடைக்கும் பணத்தைத் தீவிர வாத அமைப்புகளுக்கு வழங்கி வருவதாகவும் குற்றம் சாட்டி வருகின்றது அமெரிக்கா.

ஆனால் உண்மையில் உலகின் அதி உயர் எண்ணை வளத்தைச் சூறையாடுவதே அமெரிக்காவின் இந்தத் தாக்குதலின் முக்கிய நோக்கமாகும். இதற்கு அப்பால் அதன் கனிம வளங்களைச் சூறையாடுவற்கு அந்த நாட்டைத் தன் வசப்படுத்துவது அல்லது அதற்கு ஏற்ற தனது பொம்மை அரசை அங்கு நிறுவுவதே மெரிக்காவின் நோக்கமாகும்.

இடதுசாரிக் கொள்கையின் அடிப்படையில் ஆட்சி நடத்தும் வெனிசுலா மீதான தாக்குலை நடாத்துவதற்கான அரசியல் காரணமும் இங்கு பிரதானமானது. வெனிசுலா அரசு ஒரு காலத்தில் அமெரிக்க தனியார் கம்பனிகள் வசம் இருந்த தமது எண்ணை வளங்களை, நாட்டின் வளங்களை தனியார் உடமையில் இருந்து அரசுடமையாக்கி மக்களுக்கு சமமாக பகிரும் பொதுவுடமையாக்கியது. இந்தச் செயற்பாட்டை வெனிசுலா செய்திருப்பது அமெரிக்காவின் பாரிய வெறுப்பிற்கு வெனிசுலா உள்ளானதற்குக் காரணமாகியும் இருக்கின்றது. கடந்த சில மாதங்களாக வெனிசுலாவிற்கு அண்மையாக அமைந்த கரீபியன் கடற் பரப்பில் பல எண்ணைக் கப்பல்களை அழித்துவரும் அமெரிக்கா அதனைத் தொடர்ந்து இத்தாக்குதலை செய்திருக்கின்றது. மிகநீண்ட காலமாக அமெரிக்கா வெனிசுலா மீது பொருளாதாரத் தடையை தனது நட்பு நாடுகளுடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றது.

இதனால் வெனிசுலாவில் பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்தி இந்த பொருளாதார நலிவை அமெரிக்கா வெனிசுலாவிற்கு எதிராக உலக நாடுகள் மத்தியில் பிரச்சாரப்படுத்தியும் வருகின்றது. இதன் மூலம் தனது தாக்குதலுக்கான நியாங்களை கற்பிக்கவும் முயலுகின்றது. கடந்த காலங்களில் அமெரிக்கா இவ்வாறன செயற்பாடுகளை பல நாடுகள் மீது செய்தும் இருக்கின்றது அதன் ஒரு தொடர்ச்சிதான் இது.

குறிப்பாக லத்தீன் அமெரிக்காவில் அமெரிக்காவின் தலையீட்டின் நீண்ட வரலாறாக இவற்றைக் குறிப்பிடலாம்
குவாத்தமாலா(1954): தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி ஜேக்கபோ அர்பென்ஸ் குஸ்மான் அமெரிக்க நிறுவன நலன்களைப் பாதிக்கும் நில சீர்திருத்தங்களைத் தொடர்ந்து, பல தசாப்தங்களாக உறுதியற்ற தன்மை மற்றும் இராணுவ ஆட்சிக்கு வழிவகுத்த பின்னர், அவரைக் கவிழ்த்த ஒரு ஆட்சிக் கவிழ்ப்பை சிஐஏ ஆதரித்தது.
கியூபா(1959-1961): 1959இல் பிடல் காஸ்ட்ரோ சர்வாதிகாரி ஃபுல்ஜென்சியோ பாடிஸ்டாவை தூக்கியெறிந்த பிறகு, அமெரிக்கா அவரை நீக்க முயன்றது, இது 1961 இல் சிஐஏ ஆதரவுடன் பே ஆஃப் பிக்ஸ் படையெடுப்பில் தோல்வியடைந்தது.

பிரேசில்(1964): அமெரிக்கா கம்யூனிச எதிர்ப்பு சக்திகளையும் அமெரிக்க ஆதரவு அரசியல்வாதிகளையும் ஆதரித்தது. ஜனாதிபதி ஜோவா கவுலார்ட்டை அகற்றி 1985வரை நீடித்த ஒரு சர்வாதிகாரத்தை நிறுவிய இராணுவ சதித்திட்டத்திற்கு வழி வகுக்க உதவியது.

டொமினிகன் குடியரசு(1965): இடதுசாரி ஜனாதிபதி ஜுவான் போஸ் திரும்புவதைத் தடுக்க அமெரிக்க துருப்புக்கள் படையெடுத்து, "இரண்டாவது கியூபா" குறித்த அச்சங்களைக் காரணம் காட்டி, அமெரிக்காவுடன் இணைந்த அரசாங்கத்தை நிறுவ உதவியது.

ஈக்வடோர்(1961-1963): அமெரிக்க ஆதரவுடன் கூடிய கம்யூனிச எதிர்ப்பு முயற்சிகள் அரசியல் கொந்தளிப்புடன் ஒத்துப்போனது, அது ஒரு இராணுவ சதித்திட்டத்துடன் முடிவடைந்தது. கியூபாவுடனான உறவுகளைத் துண்டித்து, நாட்டை வாசிங்டனுடன் மிகவும் நெருக்கமாக இணைத்தது.

பொலிவியா(1964-1970): விக்டர் பாஸ் எஸ்டென்சோரோ உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கெதிரான ஆட்சிக் கவிழ்ப்புகளை சிஐஏ ஆதரித்தது, பின்னர் அமெரிக்க நிறுவனங்களை தேசிய மயமாக்கிய பின்னர் ஜனாதிபதி ஜுவான் ஜோஸ் டோரஸை குறைமதிப்பிற்கு உட்படுத்தியது.

உருகுவே(1960கள்-1973): அமெரிக்க பாதுகாப்பு உதவி மற்றும் உளவுத்துறை ஒத்துழைப்பு இராணுவ சர்வாதிகாரத்திற்கு முன்னதாக இடதுசாரிக் குழுக்களை அடக்குவதை ஆதரித்தது.

சிலி(1970-1973): ஜனாதிபதி சால்வடார் அலெண்டேவுக்கு எதிரான எதிர்க்கட்சி முயற்சிகளுக்கு சிஐஏ நிதியளித்தது. இது 1973இல் அகஸ்டோ பினோசேவின் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புக்கும் 17ஆண்டு அமெரிக்க ஆதரவுடன் சர்வாதிகாரத்திற்கும் வழிவகுத்தது.

ஆர்ஜென்டினா(1976): "Dirty War இழிந்தபோர்"இன் போது பரவலான சித்திரவதை மற்றும் காணாமல் போனதற்குப் பொறுப்பான ஆட்சியை ஆதரித்து, அதிகாரத்தைக் கைப்பற்றிய இராணுவ ஆட்சிக்குழுவை அமெரிக்கா ஆதரித்தது.

எல் சால்வடோர்(1980கள்) உள்நாட்டுப் போரின்போது அமெரிக்கா பெருமளவில் இராணுவ உதவியை அதிகரித்தது. 1981இல் மொசோட் படுகொலை போன்ற அட்டூழியங்களுக்குப் பொறுப்பான படைகளை ஆதரித்தது.

நிகரகுவா(1980கள்): ஈரான்-கான்ட்ரா இரகசிய நடவடிக்கை உட்பட, சாண்டினிஸ்டா அரசாங்கத்தை எதிர்த்துப் போராடும் கான்ட்ரா கிளர்ச்சியாளர்களை அமெரிக்கா ஆதரித்தது.

கிரெனடா(1983): உள்நாட்டு அமைதியின்மைக்குப் பிறகு, மார்க்சிய ஆட்சி மற்றும் கியூப செல்வாக்கு குறித்த கவலை-களைக் காரணம் காட்டி அமெரிக்கா படையெடுத்தது. மேலும் அரசாங்கத்தை அமெரிக்காவுடன் இணைந்த நிர்வாகத்தால் மாற்றியது.

பனாமா(1989): இராணுவ ஆட்சியாளர் மானுவல் நோரிகாவை அகற்ற அமெரிக்கப் படைகள் பனாமா மீது படையெடுத்தன. அவரது சர்வாதிகாரத்தை முடிவுக்குக்கொண்டுவந்து பனாமா கால்வாய் மண்டலத்தில் அமெரிக்காவின் செல்வாக்கை

மீண்டும் உறுதிப்படுத்தின. இந்த வரலாற்றுத் தகவல்களில் இருந்து இன்று வெனிசுலா மீதான அமெரிக்காவின் தாக்குதல், அதிபரை கடத்தியதை நாம் எந்த வகையிற்குள் அடக்கலாம் என்ற முடிவிற்குள் வர முடியும்.

அடுத்த வீட்டுக்காரருக்கு பிரச்சனை என்று நாம் இன்று மௌனமாகக் கடந்து சென்றால் நாளை எம் வீட்டிற்குள் இது நடைபெறுவதற்கு வாய்ப்பை நாமே திறந்து விட்டதாக அமைந்து விடும். எனவே சமாதானம் ஜனநாயகம் அமைதியை விரும்பும் உலகமக்கள் அமெரிக்காவின் ஏனைய நாடுகளின் இந்த இறையாண்மைக்கு எதிரான செயற்பாட்டிற்கு எதிராக குரல் கொடுத்தாகவேண்டிய கட்டாயம் இன்று எழுந்துள்ளது. .

அமெரிக்க ஏகாதிபத்திய ஒற்றைத் துருவ அரசியலின் ஆதிக்கத்தின் வெளிப்பாடுகளை இன்று உலகம் சந்தித்துக் கொண்டு இருக்கின்றது. ஆனால் வரலாறு ஒரு போதும் பின்நோக்கி நகருவதும் இல்லை. அதனை நாம் சிலியில் 50 ஆண்டுகள் கடந்து கண்டோம். இங்கும் நாம் அதனைக் காண்போம்.

வெனிசுலா: உலகத்தை கையகப்படுத்த முயலும் பெட்ரோடொலர் (Part 1)

பெற்றோல் வியாபாரத்தை டொலரில் செய்ய மறுத்ததால் வந்த வினை இது. வெனிசுலா அதிபரின் கைது நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையின் கூற்றின்படி கடந்த 4 மாதங்களாக அமெரிக்க உளவு நிறுவனமான சிஐஏ இனால் திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்ட தாக்குதல்தான். உண்மையில் இது 50 வருடங்களுக்கு முன்பு கிசிங்கர் என்ற அமெரிக்க அமைச்சரின் சிந்தனையில் உதித்த பெட்ரோடொலர் (Petro-dollar) வர்த்தகம் என்ற ஏக போக மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடுதான்.

இந்த டொலர் எண்ணை வர்த்தகம் என்றால் என்ன?

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹென்றி கிசிங்கர்

அவர்களால் வடிவமைக்கப்பட்ட பெட்ரோடொலர் (Petrodollar) அமைப்பைக் குறிக்கிறது. இந்த அமைப்பு அமெரிக்க டொலரின் உலகளாவிய ஆதிக்கத்திற்கு முக்கிய காரணமாக இருக்கின்றது.

பெட்ரோடாலர் அமைப்பு:

பெட்ரோடொலர் அமைப்பு என்பது கச்சா எண்ணெயை சர்வதேச சந்தையில் அமெரிக்க டொலரில் மட்டுமே விலை நிர்ணயம் செய்து வர்த்தகம் செய்வதற்கான உலகளாவிய நடைமுறையாகும். இது 1973ஆம் ஆண்டு எண்ணெய் நெருக்கடிக்குப் பிறகு, அமெரிக்காவிற்கும் சவுதி அரேபியாவிற்கும் இடையே ஏற்பட்ட தொடர்ச்சியான ஒப்பந்தங்கள் மூலம் நிறுவப்பட்டது.

முக்கிய அம்சங்கள்:

ஒப்பந்தம்:
சவுதி அரேபியா தனது எண்ணெயை அமெரிக்க டொலரில் மட்டுமே விற்க ஒப்புக்கொண்டது. இதற்கு ஈடாக, அமெரிக்கா சவுதி அரேபியாவிற்கு இராணுவப் பாதுகாப்பையும், இராணுவ உபகரணங்களையும் வழங்கியது.

உலகளாவிய தேவை:
அனைத்து நாடுகளும் எண்ணெய் கொள்வனவு செய்ய டொலர்களை வைத்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால், அமெரிக்க டொலருக்கு நிலையான மற்றும் தொடர்ச்சியான உலகளாவிய தேவை உருவானது. இதற்கு மாறாக வேறு நாணயங்களில் எண்ணையை வர்த்தகம் செய்யமுற்பட்ட நாடுகள் தலைவரகள் மீதான தாக்குதலின் ஒரு வடிவம்தான் வெனிசுலா மீதான தாக்குதல்.... கைது....

இந்த சிந்தனையின் அடிப்படையில் இதுவரை நடாத்தப்பட்ட வேற்று நாட்டுகள் மீதான மேலாதிக்கம், அத்துமீறல்கள், அந்த நாட்டுத் தலைவர்களின் கொலைகள் என்று பலதும் நடைபெற்றன. இதில் ஈராக் அதிபர் சதாம் ஹுசைன், கேர்னல் கடாபி முக்கியமானவர்கள். இறுதியாக இது இன்று வெனிசுலாவின் தலைவர் நிக்கோலஸ் மதுரோ மோரோஸ்.

இது இத்தோடு முடிவடையப் போவதுமல்ல. இது இன்னும் தொடரும். இதற்குள் புதிய வர்த்தக நாணயத்தை அறிமுகப்படுத்திய ஈரோவும் வீழ்ந்துபோனது. பிறிக்ஸ்(BRICKS) நாடுகளின் புதிய நாணய முயற்சியும் சிக்கித் தவிக்கின்றது. புர்கினோ பார்சோ இனது ஆபிரிக்காவிற்கான பொது நாணய முயற்சியும் கண்காணிக்கப் படுகின்றது.

மதுரோ தங்கும் இடங்களை உளவு பார்க்க பணம் கொடுத்து உளவாளிகளை அமைத்துள்ளார்கள். கூடவே ட்ரோன்(Drone) என்ற உளவு பார்க்கும் கருவிகளை பாவித்து அவரின் நடமாட்டங்கள் அவதானிக்கப்பட்டது. கூடவே அவர் தங்கும் மாளிகைகளின் மாதிரியான வீடுகள் அமெரிக்க இராணுவத் தளத்திற்குள் அமைத்து அங்கும் அவர் தங்கியிருத்தால் எப்படி அவரைக் கைப்பற்றுவது என்பதான பயிற்சியில் இராணுவம் ஈடுபட்டுள்ளது. கூடவே இரும்பிலான கனதியான கதவின் ஊடு தப்பி செல்வதற்கு அவர் முயற்சித்தால் அதனை உடைத்து அவரைக் கைதுசெய்தல் என்ற பயிற்சியும் எடுக்கப்பட்டன.

அமெரிக்காவிற்குள் கொன்கைன்(Cocaine) போதைப்பொருள் கடத்துவதற்கு பல ஆண்டுகாலமாக உடந்தையாக இருந்து வருகின்றார் மதுரோ என்பதே அமெரிக்காவின் பிரதான குற்றச் சாட்டு. இதில் வரும் பணத்தை அமெரிக்காவை எதிர்த்துப் போராடுகின்ற தீவிரவாத போராளிக் குழுகளுக்கு வழங்குகின்றார் என்பதுவும் அவர் மீதான குற்றச்சாட்டு. இவற்றைச் சர்வதேசமல்ல, அமெரிக்காதான் முன்வைக்கின்றது.

லத்தீன் அமெரிக்க நாடுகள் அமெரிக்காவின் வென்சுலா மீதான மேலாண்மையை, கைதிற்கு கடும் கண்டனம் தெரிவித்து இருக்கின்றன. இதில் அமெரிக்காவின் பொம்மை அரசாக விளங்கும் ஆர்ஜன்ரீனா மட்டும் அமெரிக்காவின் செயற்பாட்டை வரவேற்றும் இருக்கின்றது.

சீனா, ரஸ்யா, வட கொரியா தமது கடும் கண்டனங்களைத் தெரிவிப்பதோடு, மதுரோவையும் அவரது மனைவியையும் விடுதலை செய்யும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. கொலம்பியாவின் வேண்டுகோளுக்கு இணங்கள் ஐ.நா சபையில் இதற்கான விவாதம் நடைபெற உள்ள வேளை ஐநா சபையும் இது ஒரு பிழையான முன் உதாரணத்திற்கு வித்திட்டுள்ளதாக தனது கண்டனத்தைத் தெரிவித்தும் உள்ளது.

அதுசரி இந்தியா என்ன சொல்லுகின்றது...
எதிர்கட்சிகளும் இடதுசாரிகளும் இதற்கான தமது எதிர்வினைகளை ஆற்றியுள்ளனர். அமெரிக்க தூதரகத்திற்கு முன்பு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் ஆளும் பாஜக அரசு தனது கண்டனத்தைத் தெரிவிக்கவில்லை, ஆனால் கவலை தெரிவித்துள்ளது. கூடவே வெனிசுலா மக்களின் அமைதி நல்வாழ்வின் மீது தாம் அக்கறை கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. ஆனால் 1987 பனாமா நாட்டுத் தலைவரை அமெரிக்கா இதே போல கைது செய்த போது அப்போதைய ஜனாதிபதி ஐ.கே. குஜ்ரால் கடும் கண்டனத்தை, கவலையை அன்று தெரிவித்தார்.

இலங்கை அரசும் தனது பிரதான அரசியல் கட்சியான ஜேவிபி மூலம் தனது கண்டனத்தை தெரிவித்தும் இருக்கின்றது. இலங்கை மக்களும் தமது எதிர்ப்பைப் பதிவு செய்ய ஆர்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

ஆக்கிரமிப்பிற்கு பிறகு என்ன நிலமை?

“நான் போதை பொருள் குற்றவாளி இல்லை” என்றும் “நானே இன்னமும் வெனிசுலாவின் அதிபர்” என்றும் மதுரோ அமெரிக்க நீதிமன்றத்தில் கூறியுள்ளார்.
Venezuela’s Maduro tells US court ’I am still president’ as he pleads not guilty to drugs charges.

அடுத்த இதழிலும் தொடரும்

சர்வதேச ஊடகங்கள் இன்று உலக பல்கலைக்கழக தரவரிசையில் ஏற்பட்டுள்ள புதிய அலை குறித்து அதிகம் பேசுகின்றன. Leiden Traditional Ranking எனப்படும் நெதர்லாந்து பல்கலைக்கழகம் உலக தரவரிசையில் எப்போதும் அமெரிக்க பல்கலைக் கழகங்களின் அணிவரிசையே முதல் பத்து இடங்களுக்குள் இருக்கும். இம்முறை முழுவதும் சீனாவின் பல்கலைக்கழகங்கள் முதன் முறையாக Top-10 தரவரிசையில் ஆதிக்கம் செலுத்தியமை பதிவாகியுள்ளது.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, அறிவியல் சுற்றோட்டம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மிகவும் நம்பகமான ஆய்வை அடிப்படையாகக்கொண்டு வெளியாகும் Leiden Ranking இல் முதல் 10 இடங்களில் ஹார்வார்ட் பல்கலைக் கழகத்தைத் தவிர வேறு எந்த பல்கலைக்கழகமும் இடம்பெறவில்லை. ஸ்ட்பகர்ட் பல்கலைக்கழகம் 29வது இடத்தில் உள்ளது. சீஜியாங் பல்கலைக்கழகம் 1ஆம் இடத்தையும், ஷாங்காய் ஜியாவு டொங் 2ஆம் இடத்தையும் பிடித்த பட்டியலில் டொராண்டோ பல்கலைக்கழகம் எட்டாம் இடத்தில் உள்ளது. முதல் 10 இடங்களில் 8 பல்கலைக்கழகங்கள் சீன பல்கலைக் கழகங்கள் ஆகும்.

ஆராய்ச்சி அபிவிருத்தி எனப்படும் Research and Development விடயத்தின் பூகோள தலைமைத்துவம் கைத்தொழில் புரட்சிக் காலத்தில் இங்கிலாந்தில் இருந்தது. ஜேர்மன் ஐரோப்பா என்று இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் முழுமையாக அமெரிக்கா வசம் சென்றது. கடந்த 75 வருடங்களுக்கு ஆராய்ச்சி அபிவிருத்தி Global Leader ஆக உலகம் முழுவதும் பாரிய வளர்ச்சிக்கு அமெரிக்கா வித்திட்டு மானுட வரலாற்றில் மிகப்பெரிய மனிதவள அபிவிருத்தியை உலகுக்கு தந்தது. இன்று நாம் காணும் இந்த நவீன உலகம் அமெரிக்கா ஆராய்ச்சி அறிவியல் பூகோளமயமாக்கல் மூலம் தந்தது.



இன்று அந்த அலை மாறுகின்றது. சீனா உலக அறிவியல் ஆராய்ச்சி தலைமைத்துவத்தை தனது கையில் எடுக்கிறது. உலகின் இன்றைய தொழில்நுட்பத் தலைநகர் சீனாவின் சென்ஜென் நகரமே.
சீன பெருநகரங்கள் உலகின் Too Ten அதிநவீன உட்கட்டமைப்புடன் ஒரு பெரும் நெட்வேர்க்காக அதி-விரைவு ரயில் அதிவேக வீதிகள் உலகின் Top Ten துறைமுகங்கள் Top ten விமான நிலையங்கள் மூலம் இணைக்கப்பட்டுள்ளது.

இவை உலகின் அனைத்து வகையான பண்டங்கள் சேவைகள் உற்பத்தியை பல ட்ரில்லியன் டொலர் அளவுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு கல்வியும் கைத்தொழில் உற்பத்தி வணிக சந்தைப்படுத்தல் அனைத்து துறைகளிலும் seamless integration மூலம் எல்லா நாடுகளினதும் முதலாவது Trading Partner ஆக சீனா மாறியுள்ளது.

இதன் அரசியல் விளைவு உலகில் New World Disorder ஆக பரிணாமம் பெறுகிறது. இந்த மடைமாற்றம் அமைதி வழியில் நடக்க வேண்டும் என நாம் அனைவரும் பிராத்தனை புரிவோமாக. முதலாம் இரண்டாம் உலகப்போர் அடிப்படையே இந்த ஆராய்ச்சி அறிவியல் மடைமாற்றத்தின் அரசியல். இலக்கணம் மாறுதோ..?!

எனக்கேயான சொந்த விருப்புகள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாகத் துறந்துவிட்டு எனது பிள்ளைக்காகவே வாங்கினேன். எனக்கான சுய பிடிமானங்களைப் பின்தள்ளி வைத்துவிட்டு, பிள்ளைக்குப் பிடித்தமான உணவுகளை மட்டுமே தயாரித்து உண்கிறேன். நான் எனதான சுய வாழ்வை விட்டுக்கொடுத்து பிள்ளைக்காக வாழ்கிறேன் என்றெல்லாம்வெளியே தம்பட்டமடிக்கும் பெற்றோர்களைப் பார்த்தால் இப்போதெல்லாம் பரிதாபத்துக்கு உரியவர்கள் என நினைத்து அவர்கள்மீது ஒருவித அனுதாபம்தான் ஏற்படுகிறது.

இத்தகைய பலவேறான கதையாடல்களை உன்னிப்பாக அவதானித்துப் பார்ப்போமானால், பிள்ளைகளுக்குப் பிடித்ததைத்தான் வாங்குகிறார்களா. அல்லது வாங்கியதை பிள்ளைக்குத்தான் முதலில் காட்டுகிறார்களா? பிள்ளைகளுக்குப் பிடித்ததைக் கற்க அனுமதிக்கிறார்களா? பிடிக்காததை, முடியாததைத் தவிர்க்க அனுமதிக்கிறார்களா என்றால்..., இல்லை என்ற குரல் பல வீடுகளின் குழந்தைப் போர்வைகளுக்குள் ஈனமாக முனகுகிறது.

பிடித்ததை சமைத்தோம். சமைத்ததை உண்டோம் என்பதன்றி பிள்ளைகளுக்காக என்ற கொசுறு சேர்க்கப் படுமிடத்தில் அது பிள்ளைக்குப் பிடித்ததுதானா என்றால்....?!

யோசித்துப் பார்த்தால் இப்படிப் பலவையும் அவர்களே முடிவு செய்து அதுவே பிள்ளையின் தெரிவாக அதை நிறைவேற்றுதல் ஒன்றே தம் வாழ்வாக அம்பலத்தில் உரைப்பதன் ஒரே நோக்கம் தம்மீதான கவனயீர்ப்பாகவே இருக்கிறது. பலவேளைகளில் இந்தக் கவனயீர்ப்பு என்பது அனுதாப விருப்பின், தெய்வ இருப்பின் அடிகோலாகவும், கண்களுக்குத் தெரியாத விதமான அடிக் கோடிடலாகவும் விளங்கிக் கொள்ளலாம்.

இங்கு மனிதனின் பிரதான தேவையே, கவனயீர்ப்பும், தன்மீது ஏற்றிவைக்க விரும்பும் பரிசுத்த, தெய்வீக, தியாகப் பிம்பமுமாகவே இருக்கும் போது, அதற்குப் பயன்படும் நோக்கில் தம் ஆளுமைக்கு உட்பட்ட நபர்கள் அவர்களுக்குத் தேவைப்படுகிறார்கள். பெரும்பான்மையானவர்களுக்கு அதற்கு ஏற்பாக அவர்களின் ஆளுமைக்குள் உட்பட்டுக் கிடக்கும் பிள்ளைகளே வாய்க்கின்றன. பின் பிள்ளை எனும் பொம்மை மூச்சு முட்டும் திணிப்புடன் வளர்க்கப்படுகிறது.

வெளியே, பலர் பார்க்க என் கைபிடித்து அழைத்துச் செல்வதற்குப் பதில், வீட்டில் என் கை பற்றியிரு, நீ அறிய முயற்சிக்காத என்னைப்பற்றி வெளியே பேசுவதற்குப் பதில் என் மனதோடு பேசு. என்னைச் சற்றேனும் புரிந்து கொள். எனக்குப் பிடித்தவைகள் பிடிக்காதவைகளை காதுகொடுத்தாவது கேள்.
நீ அறிமுகம் செய்பவர்களில் எனக்கு ஆபத்தானவர்கள் பற்றி உன்னிடம் உரைக்கும் உரிமையையாவது கொடு. உன் அதிகாரக் கரங்களால், என்னை அடிபணிய வைக்காதே. உன் கோபக் குரலால், கடும் சொற்களால் மனதில் வலியையும் ஆறாத வடுக்களையும் அவமானத்தின் கண்ணீரையும் தராதே.

உன் விருப்பு வெறுப்புகளை என்மேல் திணித்து அவை என் விருப்பு வெறுப்பாக வெளியில் நீ காட்ட முற்படும் ஒவ்வொரு தடவையும் எதிர்க்கும் திராணியற்ற என்னைக் கொல்கிறாய். எதிர்த்தால் வன்முறையாலோ அதை விடக் கூரிய கண்ணீராலோ, நான் அர்த்தம் கூட விளங்கிக் கொள்ள முடியாத கொடிய வார்த்தைகளாலோ என்னை அடித்து வீழ்த்துகிறாய்.

மொத்தத்தில் என் வாழ்வைப்பறித்து நீ வாழ்ந்து கொண்டு எனக்காக வாழ்வதாகப் பிரகடனப் படுத்தாதே. என தம் உயிர் உதிரும் வலியில் கைப்பாவைகள் கதறும் மௌன ஓலங்களுக்குள் மறைந்திருக்கின்றது, பிள்ளை வளர்ப்பின் பெயரால் குழந்தைகள் மீது நாசுக்காகத் திணிக்கப்படும் முதல் வன்முறை.

பல குட்டிகள் ஈன்று விட்டு மல்லாந்து கிடக்கும் விலங்கு, ஒவ்வொரு முலைக்காம்பையும் கவ்விக்கொண்டு உதிரத்தை உறிஞ்சும் குட்டிகள் பற்றி தன்னை மேம்படுத்த எதுவும் பேசுவதில்லை. குஞ்சு பொரித்த கோழியின் எடையைத் தூக்கிப் பார்த்தால் இறகின் பாரம் தான் எச்சமிருக்கும். அவை கொக்கரிப்பதில்லை. இவை எவையும் குட்டிகள் மீதோ குஞ்சுகள் மீதோ ஆதிக்கம் கொள்வதுமில்லை.

குறுகிய இந்த வாழ்வின் நோக்கம் புரிந்தவை போல் அவையவை வாழ்வை வாழ்ந்து விட்டுப் போகின்றன. மனிதனைப் போலல்லாது ●

பட்டம் விடும் மரங்கள்

கடற்கரை திறந்த வெளியில்
மிக பரபரப்பாக
பட்டம் விடுகின்றனர் சிறுவர்கள்

அதனை சிறு உறுத்தலுமற்று
சுண்டிப் பறித்துச் செல்கிறது
அது வழியே சுற்றி திரிந்த காற்று

பின்னர் வேண்டாமென்று
அழுத்தமாக சொல்லியும்
மரங்களின் கைகளில்
வலிந்து கொடுத்து விடுகிறுது

பறி கொடுத்த பட்டத்தை
சிறுவர்கள் நினைந்தழுவதை
தாங்க முடியா மரங்கள்
பட்டங்களை விட்டு
அவர்களின் மனதை ஆற்றுகின்றன

இருந்தும் தனது கையிலிருந்த
பட்டத்தின் நூலை பிய்த்துச் சென்ற
கருணையற்ற காற்றின் மீது
சிறுவர்களுக்கு தீரா கோபம்

இல்லாமலா இருக்கும்
இத்தனைக்கும் காற்றை நம்பித்தான்
சிறுவர்கள் பட்டம் விடவே
வந்தார்களென்பதனை கடைசிவரை
உணரவே இல்லை காற்று

-ஜமீல்-

அந்நியம்

பொம்மைகளற்ற அறை
குழந்தைகளுக்கு
அந்நியமாவதைப் போன்று

விண் மீன்களற்ற வானம்
இரவுகளுக்கு
அந்நியமாவதைப் போன்று

துளைகளற்ற மூங்கில்கள்
காற்றுக்கு அந்நியமாவதைப் போன்று

மரங்களற்ற வீடுகள்
எப்போதும் பறவைகளுக்கு
அந்நியமாவதைப் போன்று

யாரும் எதிர்பாரா தருணங்களில்
மிக அலட்சியமாக
நிகழ்ந்து விடுகிறது அந்நியம்

சில அந்நியம் தற்காலிகமானது
சில அந்நியம் நிரந்நரமானது

இருந்தும் அவாவுறும் இருப்பு
சாத்தியமற்றுப் போதலில்
அந்நியமாகவே இருக்கிறது வாழ்வு

-ஜமீல்-

சிறை

திரைப்பட விமர்சனம்

-Nawshad.

2025 கிறிஸ்துமஸ் தினத்தில் வெளியாகி, மக்களின் அமோக வரவேற்புடன் வெற்றிகரமாக திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கிறது "சிறை".

புதுமுக இயக்குனரான சுரேஷ் ராஜகுமாரி இயக்க, "டானா காரன் (தமிழ்) கதை, திரைக்கதை எழுதியிருக்கிறார்.

கதையின் நாயகன் கதிர், ஒரு சிறைக் கைதியை எஸ்கார்ட் செய்து அழைத்துச் செல்லும் வழியில் நடந்த அசம்பாவிதம் காரணமாக மேலிடத்திலிருந்து சட்ட நெருக்கடியை எதிர்கொள்கிறார். ஆனால் தவிர்க்க முடியாத சூழ்நிலையில், நண்பனுக்காக மீண்டும் அப்துல் என்ற சிறைக் கைதியை எஸ்கார்ட் செய்து அழைத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. போகும் வழியில் கைதி அப்துல், கான்ஸ்டபிளின் துப்பாக்கியுடன் தப்பித்து விடுகிறான். அதற்குப் பின் ஹெட் கான்ஸ்டபிள் கதிரும் அவரது சகாக்களும் எதிர்கொள்ளும் சம்பவங்களே மீதிக் கதை.

படம் தொடங்கிய ஐந்தாவது நிமிடத்திலேயே எந்தவித சுற்றிவளைப்பும் இல்லாமல் அதிரடியாக கதை ஆரம்பிக்கிறது. வழக்கமாக போலீஸ் புரொசீஜர் டிராமாக்களில் காணப்படும் தொய்மை இல்லாமல் கதையை நகர்த்திய விதம் பாராட்டுக்குரியது.

ஒருபுறம் கைதி அப்துல் அனுபவிக்கும் துயரம், அவன் காதலியின் போராட்டம் மறுபுறம் கடமையா, காருண்யமா என்ற இரண்டிற்கும் இடையில் தவிக்கும் கதிர். இந்த இரண்டையும் அதிக நாடகத்தன்மை இல்லாமல் இயக்குனர் கையாண்டிருக்கிறார்.

கிராமத்துக் காதலும் அதனைச் சுற்றி நிகழும் வன்முறைகளையும் நாம் பல நூறு படங்களில் பார்த்திருக்கிறோம். ஆனால் இதில் வரும் காட்சியமைப்பும் வசனங்களும் புதுமையாக இருந்தன.

எந்தவொரு சமூக/அரசியல் பிரச்சினையைப் பேசும் கதையாக இருந்தாலும், வணிக ரீதியில் யோசிக்கும் போது சில எழுதப்படாத நியதிகளுக்காக சமரசம் செய்ய வேண்டிய சூழல் ஏற்படும். குறிப்பாக சினிமா OTT மயமான பிறகு இயக்குனர் திரையில் எந்த வசனத்தை, எந்தக் காட்சியை எப்படிக் காட்ட வேண்டுமென்பதை வணிகக் கோணத்தில் தீர்மானிக்க வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது.

ஆனால் எந்தவித விட்டுக்கொடுப்புகளும் இல்லாமல் துணிச்சலுடன் சில விஷயங்களை கதைக்குள் கொண்டு வந்த விதமே "சிறை" திரைப்படத்தை சர்வதேச தரத்துக்கு உயர்த்துகிறது. குறிப்பாக மூனார் ரமேஷ் வரும் சில காட்சிகளில் அவர் பேசும் வசனங்கள் கதையை முழுமையாக்குகின்றன. அதன் பின்னர் வரும் காட்சிகள் அனைத்தும் போனஸ்தான். கதைப்போக்கு சில இடங்களில் மைனா படத்தை நினைவுபடுத்தினாலும், இது பேசும் சமூக நீதி மற்றும் வாழ்வியல் அதை தனித்துவமாக்குகிறது.

"சிறை" இன்னுமொரு விசாரணையோ அல்லது

மைனாவோ அல்ல தமிழ்நாட்டு மதநல்லிணக்கத்தின் நேரலை.

ஈழ மக்களுக்காக உயிர் தியாகம் செய்த அப்துல் ரவூ·.பை காலப்போக்கில் நாம் மறந்து போயிருந்தோம். ஆனால் அவரை மீண்டும் நினைவில் வைத்திருக்கச் செய்தது "சிறை". உண்மையில், இப்படத்திற்கு சிறை என்பதைக் காட்டிலும் விடுதலை என்ற பெயரே பொருத்தமாக இருக்கும். காரணம், காலம் காலமாக தீவிரவாத முத்திரை குத்தப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு, குறைந்தபட்சம் சினிமாவிலாவது ஒரு விடுதலை கிடைத்திருக்கிறது.

"டானா காரன் (தமிழ்)" ஓய்வுபெற்ற போலீஸ்அதிகாரி என்பதால், அவரிடமிருந்து வழக்கமான போலீஸ்க் கதைகளை விட வித்தியாசமான கதைகளை எதிர் பார்க்கலாம். இயக்குனர் சுரேஷ் ராஜகுமாரி முதல் படத்திலேயே சிக்ஸர் அடித்திருக்கிறார். அடுத்தடுத்து கவனமாக நகர்ந்தால், இன்னுமொரு வெற்றிமாறனாக வளர வாய்ப்பு உள்ளது.

நடிகர் விக்ரம் பிரபுக்கு இது 25-ஆவது படம். நட்சத்திரப் பின்னணியைக் கொண்ட பலரும் ஓரிரு படங்களுக்குப் பிறகு காணாமல் போன சூழலில், அண்மையில் வெளியான இவருடைய படங்களில் தேர்ச்சியும் கதைத்தேர்வில் முதிர்ச்சியும் தெளிவாக தெரிகிறது. சிறையில் அதை மீண்டும் நிரூபித்திருக்கிறார்.

கதையின் மற்றுமொரு நாயகனான LK Akshay Kumar, தமிழ் சினிமாவுக்கு புதிய வரவு. தயாரிப்பாளர் லலித் அவர்களின் மகன். இது அவருடைய முதல் படம் என்று சொல்லவே முடியாது திரையில் அவர் "அப்துல்" ஆக மட்டுமே தெரிகிறார். நாயகி அனிஷ்மா மலையாளத்தில் இரண்டு படங்களில் நடித்திருந்தாலும், தமிழில் இது அவருடைய முதல் படம். ஆனால் அவரது நடிப்பு, இந்தப் படம் அவரது கேரியரில் ஒரு திருப்புமுனையாக அமையக்கூடும் என்பதை உணர்த்துகிறது. அடுத்தடுத்த வாய்ப்புகளை சரியாக பயன்படுத்திக் கொண்டால், தமிழில் ஒரு வளமான இடத்தைப் பிடிப்பார். மொத்தத்தில், "சிறை" இந்திய சினிமாவின் பிராயச்சித்தம் ●

அள்ளி அணைக்க காத்திருக்கிறேன்

ஹம்சத்வனி

மன்னிக்கவும்;
உங்களது முகத்திரைகளை
அகற்றிவிட்டு வாருங்கள்.
உங்களின்
உண்மை முகங்களுடன்
உரையாட விரும்புகின்றேன்.

நீங்கள் வடிக்கொண்ட கிரீடங்களில்
முத்துக்களை எண்ணுவது
எனது வேலையல்ல.

உங்களின் பசுக்கள் தங்கமாய்
சாணிபோடுவதைப்பற்றி
தயவுகூர்ந்து
என்னிடம் சொல்லாதீர்.

என் முன்னால்
உங்கள் பைகளின் சில்லறைகளை
குலுக்கிக் காட்டாதீர்.
காசுகளின் ஒலி என்னை
ஒன்றும் செய்துவிடாது.

உங்களின்
விலையுயர்ந்த உள்ளாடைகளில்
நாடா
தங்கத்தால் இழைத்தது என்று
கதை விடாதீர்கள்.

உங்களது தடித்த
சாயம் பூசிய உதடுகளால்
புன்னகைக்காதீர்கள்.
முத்தமிடவும் முனையாதீர்கள்.

மெய் பூசி திறந்த மேனியராய்
வாருங்கள்;
அள்ளி அணைக்க காத்திருக்கிறேன்.

கப்பித்தான் பிலிப்பன் பேதுரு

-தமயந்தி-

இறுதிப் பகுதி

மரியம் பிரண்டையாற்றுக் கடலை நோக்கி சாந்தமரியாவை செலுத்திக் கொண்டிருந்தாள். சாந்தமரியா தலையை நிமிர்த்தியபடி வேகவேகமாக முன்னேறிக் கொண்டிருந்தாள்.

பிரண்டையாற்றைத் தாண்டி கிழக்குமுகமாகச் சற்றுத்தூரம் போனால் இடிவிழுந்த ஓடை. பாரை, கயல், பாலை, முரல் எனப் பல்வகை மீன்கள் மேய்ச்சலுக்காக களக்கடலை நோக்கி போக்குவரத்தாகும் ஒரு கால்வாய்ப் பகுதி. இடிவிழுந்த ஓடைப் பகுதியில்தான் முண்டன் பதுங்கியிருக்கும் என்ற கணிப்பிலேயே மரியம் முன் நோக்கிச் செல்கிறாள் என்பதை அம்மான் புரிந்துகொண்டார். மரியம் சொல்லிக் கொள்வில்லையாலும் அவளது இந்த அனுமானம் சரிதானென்பது அம்மானின் முடிவும்.

இடிவிழுந்த ஓடையின் முகத்துவாரத்துக்குள் வந்ததும் படகின் வேகத்தைக் குறைத்துக் கொண்டாள். சாந்தமரியா மிக மெதுவாகவே முகத்துவாரத்துக்குள் நுழைந்தாள். பாலை கயல் காடன் திருவன் என மேற்தள மீன்கள் துள்ளிக் குதிக்கத் தொடங்கின. கடற்தாழங்காய்கள் செடியவிட்டு அறுந்து நீரின்மேல் அடைவதை மரியம் அவதானித்தாள். அம்மானும்தான். ஆகவே முண்டன் இந்த சுற்று வட்டாரத்துக்குள்தான் நிலைகொண்டுள்ளது என்பதை இருவரும் புரிந்து கொண்டனர். ஒருவரையொருவர் பார்த்து மெல்லியதாகச் சிரித்தனர்.

அம்மான் அணியப் பலகையில் ஏறி நின்றார் கையில் கிராஞ்சி மண்டாவை ஏந்தியபடி. அணியக்கொம்பில் முன் நோக்கி இடது காலையும், அணியப்பலகையில் பின் நோக்கினாற்போல் வலதுகாலையும் கெட்டியாகப் பதித்தபடி ஒரு முரட்டு வீரனைப்போல் கம்பீரமாக மண்டாவும் கையுமாக நின்றதைப் பார்த்து மரியம் தனக்குள் இரசித்துக் கொண்டு கடையாலில் பெருமிதத்தோடு நின்றாள்.

சாந்தமரியா இடிவிழுந்த ஓடையின் முகத்துவாரத்துக்குள் புகுந்து உள்நோக்கி நகர்ந்தபோது கடலலைகள் குய்யோ முறையோவென ஆர்ப்பரித்தது. அலைகள் சீர்குலைந்தனவாக ஒன்றோடொன்று மோதிக்கொண்டு பெருங்குரல்களோடு உடைந்து நொறுங்கி உதிர்ந்தன. சாந்தமரியாவின் அணியத்துக்கு நெற்றிமுட்டாய் மலைபோல் எழுந்தது கடல். அதன்மேல் முண்டனின் பருத்த மண்டை.

“அடியடா அம்மையா” மரியம் சொல்லி வாய்மூடுவதற்குள் அம்மானின் கையிலிருந்த கிராஞ்சிமண்டா சீறிப் பாய்ந்து முண்டனின் முன்புறத்து முதுகில் தன்னை நிறுவிக்கொண்டது.

“உச்சியில அடியடா மோட்டு அம்மையா” மரியத்தின் கட்டளை முற்றுப் பெறுவதற்கு முன்னதாகவே கருங்காலி மண்டா முண்டனின் உச்சியில் இறங்கியது.

“செவிழ்ப்பறையில அடியடா கிழவா...” மரியம் சொல்லி முடிக்கவும், தேக்கு மண்டா முண்டனின் வலப்புறச் செவிப்பறையை ஊடுருவியது. முண்டனின் உச்சியில் அடி விழுந்தால் அதன் இறுதி முடிவு ஆனாலும் இறுதி மூச்சை விடுவதற்குள் ஒரு காட்டாப்புக் காட்டிவிட்டுத்தான் சாகும். அதற்காகத்தான் அதன் சுவாசத்தை சடனாக நிறுத்த வேண்டும்.

முண்டனின் சுவாசிப்புக்கான பக்கவாட்டு செவிப்பூக்களை இயங்கவிடாமல் அடித்து நிறுத்த வேண்டும். தேக்குமண்டா தனக்கான போர்க்களப் பணியை செய்து முடித்தது. அம்மான் தனது மடிப் பெட்டியிலிருந்து ஒரு சரவணைப் புகையிலையில் சுற்றிய சுருட்டை எடுத்துப் பற்றவைத்து, ஒரே ஊதலில் புகை மூட்டங்களை எல்லாத் தீவுகளுக்கும் அனுப்பிக் கொண்டிருந்தார்.

இடி விழுந்த பள்ளத்தாக்கிலிருந்து கட்டியிழுத்து வரப்பட்ட முண்டன் இப்போ கண்டல்முனைக் கரையில் நீட்டி நிமிர்ந்து அசைவற்றுக் கிடந்தது. கண்டல்முனைச் சனங்கள் மட்டுமல்ல, அயலட்டைக் கிராமங்களெல்லாம் கண்டல்முனைக்கரையில் செத்துப்போன முண்டனை வேடிக்கை காண்பதற்காக அல்லோலகல்லப் பட்டனர்.
பிலிப்பன் பேதுரு அம்மான் தனது மூன்று மண்டாக்களையும் தோழில் சுமந்தபடி வடக்கு நோக்கி நடந்தார்.
மரியம் காற்றோடும், கடலலைகளோடும் கரைந்து நின்று கண்டல்முனைக் கரையை வேடிக்கை பார்த்து நின்றாள்.

முற்றும்.

கிளிநொச்சியில் அமைய இருக்கும்
"போக்குவரத்து மாதிரிக் (முன்)கிராமம்"
Traffic Model Village

அருட்தந்தை செ. அன்புராசா, அமதி

(படங்கள்: கிளிநொச்சி மாவட்டச் செயலகம் "மீடியாயுனிற்")

வீதி விபத்து கட்டமைக்கப்பட்ட ஒரு பெரும் பிரச்சினையாக "கொலை அச்சுறுத்தலாக எமது அனைத்துப் பிரதேசங்களிலும் இப்போது மாறிவிட்டது. இந்நிலையில் "நல்ல சாரதிகளை உருவாக்கினால் வீதி விபத்துகளைத் குறைக்கலாம், தடுக்கலாம்!" என்ற நோக்கில் கிளிநொச்சி றொட்டறிக் கழகத்தின் அனுசர--ணையில் கிளிநொச்சிச் செயலகத்தில் 30.01.2026இல் இடம்பெற்ற முதலாவது செயலமர்வு மிகவும் பயனுள்ள வகையில் இடம்பெற்றது.

பல நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் கருத்துகள் பகிரப்பட்டன. இவ்வரிசையில் கிளிநொச்சி அரச அதிபர் எஸ்.முரளிதரன் அவர்களின் உரையைத் தொடர்ந்து கலாநிதி.திருவரங்கன் மகேந்திரன், பொறியியலாளர் ரி.சிவகுமார், மனநல வைத்திய நிபுணர் யூடி ரமேஸ் ஜெயகுமார், றொன்றிக் கழக உறுப்பினர் ஆர். கஜேந்திரக்குமார், நோர்வேயிலிருந்து வருகை தந்திருந்த பொறியியலாளர் அலோசியஸ் சந்தியாப்பிள்ளை போன்றோரின் நிபுணத்துவம் வாய்ந்த கருத்துகளும் அனுபவங்களும் பகிரப்பட்டன. நிகழ்வின் இறுதியில் பலரும் தங்களது ஆக்கபூர்வமான கருத்துகளையும் இத்திட்டத்தைக் கட்டாயமாக முன்னெடுக்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தி நின்றனர்.

இவ்விடயத்தை செய்யவேண்டும் என்ற ஆர்வத்தோடு மிக நீண்ட காலமாக இத்திட்டத்தோடு பயணித்துவரும் நோர்வே பேர்கன் நகரைப் வாழ்விடமாகக் கொண்ட அலோசியஸ் சந்தியாப்பிள்ளை இணைந்து கொண்டதும் உரையாற்றியதும் குறிப்பிடத்தக்கது.

காலை 9மணி தொடக்கம் 1மணிவரை இந்நிகழ்வு சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. றொட்டறிக் கழகத்தினர் உட்பட, கிளிநொச்சி அரச அதிபர், வடமாகாண போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர், திணைக்களங்களின் பணிப்பாளர்கள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், விரிவுரையாளர்கள், அதிபர்கள், பொலிசார், வங்கி முகாமையாளர்கள்,

சமூகத் தன்னார்வத் தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி உமையாள் புரத்தில் 5ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, சாரதிகள் பயிற்சி பெறும் மையம் அமைப்பதற்கான தொடக்க வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. இவ்விடயம் குறித்து தொடர்ந்து பல செயற்பாடுகள், கருத்தமர்வுகள், விழிப்புணர்வுக் கூட்டங்கள், கலந்துரையால்கள் இடம்பெற இருக்கின்றன. இவற்றில் அனைவரும் கைகோர்த்து நிற்பது காலத்தின் அவசிய அவரசத் தேவை என்பதைப் புரிந்துகொண்டு செயற்பட ஒன்றிணைவோம், முன்வருவோம்.

இந்நிலையை அடைய ஏறக்குறைய பத்தாண்டுகள் பல இடங்களுக்கும் அலைந்து திரிந்த அனுபவங்கள் இப்போது நிறைவேறி இருப்பது மிகுந்த ஆறுதலையும் மனநிறைவையும் தருகிறது. இணைவோம்! போதை போன்றதொரு உயிர்ப்பலி எமனை ஒழிப்போம்!

சிறுவர் பூஞ்சோலை

ஆரணி சத்தியதேவன் (7வயது) இலங்கை

ஆருதி சத்தியதேவன் (9வயது) இலங்கை